ஞானபாநு

VOL 3. தொகுதி ௩. | January 1916. ராக்ஷஸ௵ தை௴ | No 10. பகுதி ௧௦

ஜீவகாருண்ணியம்.

"தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை"

என்றார் திருவள்ளுவர். இவர் "உன்னுடைய உயிர் நீங்கும்படியான சந்தர்ப்பங்கள் நேரிட்ட காலத்தும் பிறிதொருயிரைக் கொல்லும்படியான தொழிலைச் செய்யாதே" யென்று உபதேசிக்கிறார். பேச்சும் செய்கையும் வேறுபட்டுப் பிரமித்துத்திரிகின்ற தற்காலச் சீர்திருத்தக்காரர்களையும் தலைவர்களையும் போன்றவரல்லர் இவர். இவர் தாம் சொல்லியதைச் செய்து காட்டியவர். இவர் அநுபவ ஞானியாயிருந்ததினால் தான் இவருடைய அநுபவ ஞானக் கருத்துக்கள் அடங்கிய குறள் உலகமுள்ளளவும் உயர்ந்து சிறந்து தமிழ்வேதமென எல்லோராலும் கொண்டாடப்படுகின்றது. எவ்வுயிரும் தம்முயிரெனக்கருதி, கொல்லாமையென்னும் விரதத்தைக் குறியாகக்கொண்டு இவர் எவ்வுயிருக்கும் இம்சையில்லாத நெசவுத்தொழிலை ஏற்று அதனால் ஜீவனம்செய்து வந்தார். இவர் தமது நெசவுத்தொழிலினால் மனிதருடைய ஸ்தூல தேகத்தைச் சுற்றிக்கட்டுவதற்கு குறுக்கு நெடுக்குமாக நூல்களைப் பிணைத்து அழகிய வஸ்திரங்களை யளித்துதவியது போல, தமது அநுபவ கம்பீரத்தினால் பற்பலவித மேம்பட்ட கொள்கைகளையும் சேரப்பிணைத்து குறள் என்னும் ஆடையை நெய்து கொடுத்து மானிட வர்க்கத்திற்கு அலங்காரமான உடையளித்தார். இந்த ஆடையினால் அலங்கரிக்கப்பட்டவர்களுக்கு எங்கும் செல்வாக்கு உண்டு; எவ்விடத்திலும் தடையின்றிச் செல்லலாம்; எப்பொழுதும் இவர்களுடைய வசனங்கள் எவராலும் மதிக்கப்பெறும். இந்த ஆடையினால் அலங்கரிக்கப்பட்டவர்களைத் தமது தமது உலகங்கட்கு இட்டுச்செல்ல வேண்டுமென்ற ஆக்கிரகத்துடன் திரிமூர்த்திகளும் தேடிக்கொண்டிருப்பார்கள் என்று கூடச் சொல்லலாம்.

* * *

நிற்க, கொல்லாமையைக் குணமாகக்கொண்ட இவர் கூறிய கூற்றுக்கு உதாரணமாக, சிபிச்சக்கரவர்த்தி ஒரு புருவைக்காக் கும் நிமித்தம் தனது தொடையிலிருந்து மாம்சத்தை அறுத்துக் கொடுத்தான் என்று நமது புராணங்களில் சொல்லப்பட்டிருக் கிறது. எப்பொழுதுமே நமது ஜன்மபூமியாகிய இப்புண்ணிய நாட்டில் ஜீவஹிம்சையானது சண்டாளத்துவம் எனக்கூறப்படு கிறது. ஜீவஹிம்சை செய்வதினாலேயே புலையர், பறையர், சண் டாளர் எனப்படும் ஜாதியார் தாழ்ந்த வகுப்பினர் எனக்கருதப் பட்டார்கள். தொன்றுதொட்டு இந்நாட்டில் தோன்றிய புண் ணிய புருஷர்கள் பலரும் ஜீவஹிம்சையை நிராகரித்தே பேசி யிருக்கின்றார்கள். சங்கரர், ராமாநுஜர், மாத்வர், சைதந்நியர் முதலிய அவதார புருஷர்கள் ஜீவஹிம்சை செய்பலாமென்று எங்கேனும் கூறியதாகக் காணவில்லை. ஸ்ரீதாயுமானவர் ஸ்வாமிக ளும் "கொல்லாவிரதம் குவலயமெல்லா மோங்க வெல்லார்க்கும் சொல்லுவ தென்னிச்சை பராபரமே" என்றார். ஸ்ரீராமலிங்க ஸ்வாமிகளும் "யாதொன்றுங் கொல்லாதார்க் கின்பங் கொடுப்ப தாய்" என்று ஈஸ்வரனுடைய லட்சணத்தை வர்ணித்தார்; இன் னும் "கொல்லா விரதமது கொள்ளாரைக்காணி லொருபுல்லாக வெண்ணிப் புறம்பொழிக" என்றார். கொல்லா விரதமது கொள் ளாரை மலம்போல வெண்ணி வெறுத்து நீங்கல்வேண்டும். கொல் லா விரதமது கொள்ளாமல் புலாலிலேயே புந்தி வைத்திருப்பவர் கள் தான் புலையர்கள் என்று சொல்லப்படுகிறார்கள்.

* * *

ஜீவஹிம்சை செய்யும் பாபிகளின் செயல்களை நினைக்க நினை க்க நமது மனம் பகீரென்கிறது. குற்றமற்ற, சுத்தசாதுத் தன்மை வாய்ந்த ஆடு, மாடு, முதலியவற்றை அறுத்துத்தின் னும் அசுரர்கள் ஆஷாடபூதி வேஷமும் போடுகின்றார்களே! ஏ, சகோதரா, உனக்குச் சிறிது புத்தியும் யுக்தியும் இருந்தால் உனக்குச் சிறிது சாமர்த்தியமிருந்தால், இவற்றை உனக்கு அறு காரணமாக வைத்துக்கொண்டு 'மற்ற ஜீவராசிகளை உன்னிஷ்டம் போலக் கொல்லலாம் என்பது என்ன நியாயம்? உன்னுடைய அகங்காரமல்லவா வாயில்லாப் பிராணிகளை வதைப்பதற்கு இடம் கொடுக்கின்றது? உன்னுடைய (அஞ்ஞானக்) கொழுப்பல்லவா எளிய ஜீவராசிகளின் இரத்தத்தை உறிஞ்சும்படி செய்கின்றது? உன்னுடைய மமதையினாலல்லவா கோடிக்கணக்கான ஜீவராசி

கள் கொல்லப்படுகின்றன? உன்னுடைய சரீரத்தைப் போன்று அவற்றின் சரீரங்களும் மாம்சத்தால் ஆக்கப்பெற்றவை தானே? மாம்சத்தைத் தின்று மாம்சத்தைப் பெருக்குகின்ற மானிடப்பதர்களே! போதும்! போதும்! நிறுத்துங்கள் உங்களுடைய மானங்கெட்ட செய்கையை. சரீரத்தில் எங்கேனும் ஒரு புண் உண்டாமாயின், அது எவ்வளவு அருவருக்கப்படுகின்றது! இத்தகைய புண்கள் நிறைந்த புலாலைப்புசிப்பவனே, அவன் ஈரேழுபதினான்கு உலகங்கட்கும் ஏகச்சக்ராதிபதியா யிருந்தபோதிலும், புலையன் என்று சொல்வதில் தடையென்ன?

* * *

மாம்சம் உண்ணும் மகா பாதகர்களே! சாதுக்களான ஆடு, மாடு முதலியவைதானா உங்களிடத்தில் அகப்பட்டுக்கொண்டன? நீங்கள் பேடிகள், பயங்காளிகள். அடங்கி அமர்ந்திருக்கும் மிருகங்களைக் கொன்று தின்பதில் பெருமையேது? நீங்கள் தைரியசாலிகளானால், சாமர்த்திய சாலிகளானால், புலி காடி முதலியவற்றைக் கொன்று தின்னுங்கள். மாம்ச பட்சணஞ்செய்யும் மிருகங்கட்கும் உங்களுக்கும் வித்தியாசம் என்ன? அவை நாற்கால் மிருகங்கள்; நீங்கள் இருகால் மிருகங்கள். மாம்சந்தின்பதினால் ஸ்தூலபலம் அதிகரிக்கின்றது என்றால், மாம்சக் கொழுப்பு மிகுந்துள்ள மனிதர்களைப் பிடித்துக் கொன்று தின்னுங்கள், பார்ப்போம். இதுசெய்ய உங்களால் முடியாது அவர்கள் உங்களைத் துவைத்து மிதித்து விடுவார்கள். உங்களைப் போன்று அவயவங்கள் வாய்ந்த ஒரு சாதாரண மனிதனைக்கூட, அவன் எவ்வளவு பலயீனனாயிருந்தபோதிலும், உங்களால் தொடமுடியாது; ஸ்வயநலம் மிகுந்த மானிட ராஜாங்கச் சட்டங்கள் குறுக்கே நின்று பலயீன மனிதர்களை ரட்சிக்கின்றன. தவிர, மாம்சம் சாப்பிடுவதினால் ஸ்தூலபலம் அதிகரிக்கின்றது என்பது வீண் பிரமை; ஆனால் குரூர குணங்கள் மிகுகின்றனவென்பது நிச்சயம்; அன்பென்னும் ஆரியத்தன்மையை அழித்துவிட்டு, நீங்கள் புலி, காடிகளாக விரும்புகின்றீர்களா? புலி, காடி முதலிய துஷ்ட மிருகங்களைக் கொல்வதற்கு அரசாங்கத்தார் அநுமதிச் சீட்டு அளிப்பது போல, நிரபராதிகளான ஆடு, மாடு முதலியவற்றை அடித்துத் தின்னும் மானிட மிருகங்களை மரணத்திற்குப் பின் மகாரௌரவாதி நரகத்திலிட்டே துன்புறுத்த வேண்டுமென்று மஹேஸ்வரனுடைய சிருஷ்டி நீதி உரைக்கின்றது.

உலகில் உயிரில்லா வஸ்துக்கள் எவை? மரம், செடி முதலி
யவை வளர்கின்றனவன்றோ? இவற்றில் உயிரில்லையோ? இவற்றை
மாத்திரம் தின்னலாமோ? என்று பல கேள்விகள் உண்டாகலாம்.
நமது நகங்களையும் ரோமங்களையும் நாம் நீக்கி எறிந்துவிடும்பொ
ழுது நமக்குத் துன்பம் உண்டாகின்றதா? ஆனால் நகங்களும் ரோ
மமும் வளர்கின்றனவன்றோ? இதுபோலவே, மரங்களினின்றும்
காய்களையும் கனிகளையும் பறித்து உண்பதினால், அவற்றிற்கு எவ்
விதத் துன்பமும் உண்டாகின்றதில்லையென்று ஆன்றோர் கூறு
கின்றனர். நமது பாரத பூமியானது ஜீவகாருண்ணியத்திற்கு
ஜன்மபூமி. "எல்லா வஸ்துக்களிலும் உன்னையும் உன்னில் எல்லா
வஸ்துக்களையும் பார்" என்ற இனிய உபதேசமானது இப்பூமியில்
தான் உற்பத்தியாயிற்று; "இரண்டென்பதில்லை; எல்லாம் ஒன்
றே" என்ற கம்பீர கோஷமானது இங்குதான் கிளம்பிற்று. ஒரு
சிறிய ஆட்டுக்குட்டியை ரட்சிக்கும் பொருட்டுத்தமது உயிரைப்
பலிகொடுக்கத் துணிந்த புத்தர், அன்பே அவதாரமானதுபோல
எழுந்தருளிய புத்தர், அன்பே இன்பமென்னும் அரிய கொள்கை
யை அவனியில் நிலைநாட்டிய புத்தர், பிறர் துன்பங்களைப் பார்க்கச்
சகியாத பேரன்புவாய்ந்த புத்தர் நமது நாட்டில் தான் அவதார
மாயினர். ஆடு மாடுகளின் பரிதாபகரமான ஸ்திதியை நினைத்த
ல்லவோ சாட்சாத் பகவானும் அவற்றையே தாம் பெரிதாகக்கரு
துவதாக உலகினர் அறியும் பொருட்டு, அவற்றை ரட்சிக்கும்
ஆயர்பாடியில் ஸ்ரீ கிருஷ்ணனாகத் தோன்றினார். சகோதரா, உண்
மையில் உயர்ந்த நூல்கட்குத் தாம் இடங்கொடுத்த சங்கப்பல
கைபோல, திருவள்ளுவரை நம்புபவர்கட்குத் தான் தமிழுலகம்
இடம் கொடுக்கின்றது; புத்தர் அவதார புருஷரென்று நம்புபவர்
கட்குத் தான் இப்புண்ணிய பூமி இடம்கொடுக்கின்றது. ஸ்ரீகிரு
ஷ்ணனை நம்புபவர்கட்குத் தான் ஹிந்து மதத்தில் இடம் உண்டு.
ஆதலால், நீ கொல்லாமையென்னும் விரதத்தைக் கைக்கொள்க.

* * * * * *

நமது நாட்டில் அவதரித்த புண்ணிய புருஷர்களில் ஸ்ரீவிவே
கானந்த ஸ்வாமிகள் ஒருவர் தாம் மாம்சம் உண்ணலாமென்று கூறி
யுள்ளாரென்றும் அவர் மாம்சம் உண்டதுண்டென்றும் கூறப்படு
கின்றது. இது ஒருவாறு உண்மையே யாயினும், ஸ்வாமிகளின்
உண்மையான உட்கருத்துக்களை ஆழ்ந்து ஆராயாது, அவரைக்
குற்றங் கூறுதல் மிகவும் தவறு. சில சந்தர்ப்பங்களை முன்னிட்டு

ஸ்வாமிகள் மாம்ச போஜனத்தைப்பரிந்து பேசியதுஉண்மையே ஆனால் மாம்ச போஜனத்தை அவர் வெறுத்து வந்தாரென்பதி லும் இகழ்ந்து கூறியுள்ளாரென்பதிலும் சந்தேகமில்லை. சர்வ சமரச பாவனை வாய்ந்த மகான்கள் வாசனைத் திரவியங்களணிந்து கொண்டாலும் மலத்தைப் பூசிக்கொண்டாலும் அவர்களுடைய மனம் விகாரமடைகின்றதில்லை யென்னும் சிறந்த போதனையைக் கேள்வியுற்ற ஒரு மூடன்தானும் ஒரு மகானாக விரும்பி, மகான்க ளுடைய உத்தம லட்சணங்களை யெல்லாம் கைப்பெறுவதற்கு ஆற்றலில்லாது மலத்தைப் பூசிக்கொள்வதையே முக்கிய லட்சண மாகக் கருதித்தனது சரீரம் முழுவதிலும் அமேத்தியத்தை யெடுத்து அப்பிக்கொண்டானும். மலம்பூசிக் கொள்ளுதல் தான் மகான்களின் லட்சணமென்றால், மலந்தின்னும் நாயையும் பன்றி யையும்விடச் சிறந்த மகான்கள் எவர் உளர்? ஸ்வாமி விவேகாநந்தருடைய உத்தம லட்சியங்களையும் கொள்கைகளையும் நாம் பின்பற்ற வேண்டுமேயொழிய, சில விசேஷ சந்தர்ப்பங்களை முன்னிட்டு அவர் பரிந்துபேசிய மாம்ச போஜனத்தை நாம் பொ துவிதியாகவும் முக்கிய விதியாகவும் கொள்ளுதல் நியாயமன்று.

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
யெல்லாவுயிருந் தொழும்"

என்றார் நமது பழைய திருவள்ளுவர். ஒருயிரையும் துன்பு றுத்தாதவன் சர்வஜீவ தயாபரனுவன்; அவனே ஈஸ்வரன்; ஜீவ கோடிகளெல்லாம் அவனிடத்தில் சாணுகதி யடைகின்றன. அவ னுடைய ஆக்ஞாசக்கரமே இப்பிரபஞ்சத்தில் ஆணை செலுத்து கின்றது. அகில லோகங்களும் உனது அடைக்கலம், ஜீவராசி கள் அனைத்தும் உனது அடைக்கலம், எல்லாம் ஒன்றேயென்னும் கொள்கை யெங்கும் பரவ யிரங்குவாய், என்று நாம் எம்பெரு மானை இறைஞ்சுகின்றோம்.

ஸ்வாமி விவேகாநந்தரின் எதிரொலிகள்.

[ஸ்ரீமாந்-எம்-ஸி-நஞ்சுண்டராவ் அவர்கள் எழுதியது.]

(முன்தொடர்ச்சி.)

தனக்குநேரிட்ட ஆபத்தினின்றும் தப்பித்துக்கொண்ட ஸிவாஜி இதனால் கதா காலக்ஷேபங்களைக் கேட்கவேண்டுமென்ற

ஆசையைவிட்டு நீங்கினனில்லை. ஆபத்துக்கள் நேரிட நேரிட, அவனுக்கு உற்சாகம் மிகுந்தது, துணிகரத்தன்மை பெருகிற்று. இன்னொருசமயம் சாது கோஸ்வாமி என்னும் மகாத்மாகு சேலைபாக்கியானத்தை விரித்துரைத்துக்கொண்டிருக்க, அதைக் கேட்டாநந்திக்கும் பொருட்டு ஸிவாஜி அங்குசென்றான். கோஸ்வாமியானவர் தமது பிரசங்கத்தின்மத்தியில், ஒருவனுக்கு மோட்சமடைதற்குவழிகாட்டி சற்குருவேயென்றும் சற்குருவின் அநுக்கிரகம் இல்லாவிடில் நித்தியாநந்தம் கிடைப்பது துர்லபமென்றும் சற்குருவின் மகிமைகளைப்பற்றியும் குருசிஷ்ய சம்பந்தத்தின் சிறப்பைப்பற்றியும் நமது வேதசாஸ்திரபுராண இதிகாசங்களிலிருந்து எண்ணற்றதிருஷ்டாந்தங்களும் ஆதாரங்களும் எடுத்துக்காட்டிச் சரமாரியாகப் பிரசங்கித்தார். கேட்டான் ஸிவாஜி, கவலையடைந்தான். இது நாள்வரையில் தனக்குச் சற்குருவின் அனுக்கிரகம் கிடையாதிருக்கதுபற்றி விசனித்தான், ஏங்கினன்.

தர்மார்த்த காமமோக்ஷமென்கிற சதுர்வித புருஷார்த்தங்களில் மோட்சமென்பதே மானிட ஜன்மப் பிரயோசனமென்றும் பிரஹ்மாநு பவமாகிய மோட்ச மடைகிறவரையில் மனிதனுக்கு துக்க நிவிர்த்தி சம்பவிக்காதென்றும் மனிதன் ஜனனமரண சம்சார சக்கரத்தில் சுழன்றுகொண்டே யிருப்பானென்றும் பிரஹமாநு பூதியடைய வேண்டுமென்றால் தமது கிருபா நோக்கத்தினுலும் பச்சாத் தாபத்தினுலும் மானிட வர்க்கத்தை உயர்த்தி உய்விக்கவல்ல பிரஹ்மாநு பூதிச் செல்வராகிய சற்குருவின் கடாட்சத்தினலன்றிக் கிட்டாதென்றும் கோஸ்வாமி கோஷித்தார்.

லௌகிக காரியங்களையும் சாஸ்திரங்களையும் கற்றுக்கொடுக்கிற உபாத்தியாயர்களையும் வைதிகச் சடங்குகளை நிறைவேற்றி வைக்கின்ற சாதாரண வைதிகர்களையும் குருக்கள் என்று எண்ணிக் கொள்ளக்கூடாது. தாம் ஆத்மாநுபவம் பெற்று, சிஷ்யனுடைய மனோபரிபக்குவத்தையும் அறிந்து அவனுக்கு ஆத்மோபதேசம் செய்து அவனையும் ஆத்மாநு பூதி யடையச் செய்விப்பவரே உண்மைக் குருவாவார். அத்தகைய குருவின் மகிமை அளவிடற் கரிது; நமது இந்திய தேசம் தான் அத்தகைய குருவின் சத்திய மகிமையை யறியும். மற்ற தேசங்களில் அத்தகைய குரு

அகப்படுவதே அரிது; அப்படி யகப்பட்டாலும், அவருடைய அருமை அவர்களுக்குத் தெரியாது.

பின்னும் ஸ்வாமிகள் கூறியதாவது:—நாம் நமது ஆயுட்காலம் முழுதும் புத்தகங்களைப் படிக்கலாம், நாம் புத்தியிற் சிறந்து விளங்கலாம், ஆயினும் ஆத்மஞான விஷயத்தில் அணு வளவேனும் அறிந்து கொள்ள முடியாது.

கேட்பவர் பிரமிக்கும்படியாகப்பேசுவதற்குப் புஸ்தகப்படிப்பினால் நாம் கற்றுக்கொள்ளலாம். ஆனால் அந்தப்பேச்சை அநுபவத்தில் கொண்டு வருதற்கு நம்மால் முடிகின்றதில்லை. சற்குருவின் கடாட்சமுண்டானாலன்றி, அநுபவ ஞானமடைதல் அசாத்தியம்.

இவ்விதமாக கோஸ்வாமி சற்குருவின் அருமை பெருமைகளைப்பற்றியும் ஆவசியகத்தைப் பற்றியும் கூறி, ஏகச்சக்ரேஸ்வரனாயிருந்த போதிலும் சற்குருவைத்தேடி யடையாதவனுடைய ஜன்மம்வியர்த்தமே என்று சொன்னபொழுது, இவ்வார்த்தைகள் ஸிவாஜியின் ஹிருதயத்தை ஊடுருவித் துளைத்தன. இதுவே எண்ணமாய், துக்காக்கிராந்தனாய், ஸிவாஜி தனது அரண்மனைக்குத் திரும்பி வந்தான். ஆனால் நித்திரை வரவில்லை. தான் சற்குருவை யடைய வேண்டுமென்ற ஒரே தியானத்துடன் அன்றிரவு முழுதும் கழித்தான். பொழுது விடிந்தது; எப்படியாவது குருவைத்தேடி அவரது அநுக்கிரகத்திற்குப் பாத்திரமாக வேண்டுமென்று பிரதிக்ஞை பண்ணிக்கொண்டு படுக்கையிலிருந்து எழுந்திருந்தான். தனக்கு அறிமுகமாயுள்ளவரும் பக்த சிரேஷ்டரென்றும் மகாத்மாவென்றும் தன்னால் கருதப்பட்டுள்ளவருமாகிய துக்காராம் ஸ்வாமிகளைத் தேடிக்கொண்டு சென்றான். பிரதாபகிரியென்னும் ஊரின் பக்கத்திலுள்ளதோர் கிராமத்தில் ஸிவாஜி துக்காராம் ஸ்வாமிகளைக்கண்டு அடியற்ற மரம்போல அவர் பாதங்களில் விழுந்து "ஸ்வாமி, என்னை ஈடேற்றி யருளவேண்டும்" என்று பயபக்தியுடன் முறையிட்டுக்கொண்டான். அந்த மகாத்மாவானவர் ஸிவாஜியினுடைய பக்தியைக் கண்டு வியந்து ஆநந்தக் கண்ணீர் சொரிந்து "ஸிவப்பா, உன்னுடைய பக்தி மெச்சற்பாலது; சற்குருவை யடைய வேண்டுமென்று நீ செய்து கொண்

ந்தும் சக்தி [illegible] அறிவேன். என்றிது

பெரியோர் ஒருவர் எதிர் நோக்கிக் காத்துக்கொண்டிருக்கிறார். நான் குடியானவன்; உபதேசம் செய்யும் உத்தம கர்மத்தை வகித்தல் கூடாது. பிராம்ஹண சந்நியாசியே ஆசார்யஸ்தானத்தை வகிப்பதற்கு அர்கதையுள்ளவர். கூடிய சீக்கிரத்தில் உனக்கு சற்குரு கடாட்சம் உண்டாகும்; உனது துக்கங்களெல்லாம் நிவிர்த்தியாய்விடும்'' என்று கூறி ஆசீர்வதித்து அனுப்பினர்.

ஸிவாஜி துக்காராம் ஸ்வாமிகளிடத்தில் விடைபெற்றுக்கொண்டு பிரதாபகிரியை நோக்கிச் சென்றான். அவன் அன்று முழுமும் உபவாசம்: அவன் ஸ்நானம் செய்து தேவி க்ஷேத்திரத்துக்குள் நுழைந்து, இவ்வுலக பந்தங்களினின்றும் விடுவிப்பதற்கு ஒரு குரு கிடைப்பாரென்பது நிச்சயமானல், அந்த குரு தனது கனவில் தோன்றி தனக்கு தர்சனம் கொடுக்க வேண்டுமென்று தேவியைப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தான்.

(வரும்.)

ஈகை.

[பிரஹ்மஸ்ரீ பாதூர் சேஷாத்திரி ய்யங்காரவர்கள் எழுதியது]

தம்மிடத்துள்ள பொருள் எதையாவது பிறருக்குக் கொடுத்தல் ஈகை யெனப்படும். ஈகைக்குணம் செயற்கையால் உண்டாகாமல் இயற்கையாய் மனிதர்களின் பிறப்பிலேயே உண்டாகும் உயர்ந்த குணம். இக்குணம் ஏனைய உயிர்களிடத்துப் பொருந்தாமல் மனிதர்களிடம் மட்டுமே நிகழ்வதாகிய இரக்கத்தினுல் உண்டாகும் மனநெகிழ்ச்சியாம். தம்மினும் மேம்பட்ட பொருள், அறிவு, ஆற்றல் முதலியவைகளை யுடையவர்களுக்குப் பயத்தினுல் கொடுப்பதும், பலவிதத்திலும் தம்மை யொத்தவர்களுக்குப் பெருமைக்காகக் கொடுப்பதும் ஈகையாகா. தரித்திரராய் யாசித்தவர்க்குஇல்லையென்று மறுக்காது கொடுத்தலே ஈகையெனப்படும். ஈ, தா, கொடுவெனும் மூன்றும் முறையே இழிந்தோன், ஒப்போன், மிக்கோன் இரப்புரை என்ற நன்னூற் சூத்திரத்தினுலும் ஈகை யென்பது தன்னினும் இழிந்தவனை பொருளில்லாதவனுக்கு அவனினும் உயர்ந்தவனை பொருளுடையவன் அவன் வேண்டியதொரு பொருளைக் கொடுத்தல் என்றே

ஏற்படுகிறது. தன்னலங் கருதாமலும் புகழ்ச்சி விரும்பாமலும் நன்றி நோக்காமலும் கொடுப்பதே ஈகையாகும். தெய்வ கிருபையால் மனிதர்களுக்கு உண்டாதல்பற்றி இதை தெய்வீக குணமென்று அறிந்தோர் கூறுவர்; ஈகைக்குணமில்லாதார் பார்வைக்கு மனிதராய்த் தோற்றமுறினும் மனிதரல்லர். கொடுக்குங் குணமுடைய தாதாக்களையும் அக்குணமில்லாத லோபிகளையும் ஒரு நிகராக மனிதரென்று வழங்குதல், மிகச் சிறப்புள்ளதான பொன்னையும் அச்சிறப்பில்லாததான இரும்பையையும் பொன்னென்ற பெயராலேயே குறிப்பிடுவது போலும். அடக்கம், உண்மை, பொறுமை முதலிய எல்லாக் குணங்களும் ஒருவனிடம் அமைந்து ஈகை மட்டுமிலதாயின் அவனிடம் கடவுளுடைய அருள் சிறிதும் உண்டாகாது. ஏழைகளுக்கு இரங்கியளிக்காதவனுக்குக் கடவுளும் இரங்கார். மனிதராயுள்ளவர்கள் இவ்வுலகில் அடையும் உறுதிப்பொருள்களாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்பவற்றுள் மற்றைய மூன்றையும் எய்துவிப்பது அறமேயென்பதும் அத்தகைய அறந்தானும் ஈகையையன்றிப் பிறிதில்லையென்பதும் கற்றறிந்தார் யாவர்க்கு முடன்பாடாம். இக்கருத்தேபற்றி ஔவையாரும் ஈதல் அறம் என்றார். அன்றியும் அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை, இல்லறமல்லது நல்லறமன்று எனத் திருவள்ளுவராலும் ஔவையாராலும் சிறப்பித்துக் கூறப்பட்ட இல்லறத்துக்குத் துறவறத்தைக் காட்டிலுமுள்ள உயர்வு ஈகையென்னும் அறத்தைத் தன்னிடம் கொண்டிருப்பதாலேயே. இக்கருத்தைத் தெய்வப் புலவர் "ஆற்றுவாராற்றல் பசியாற்றல் அப்பசியை மாற்றுவார் ஆற்றலிற்பின்" என்னுங் குறளால் விளக்கினர்.

பொருள் பெற்றொருவன் அப்பொருளைச் சேமித்து வைக்கும் பொருட்டு முதலாளிகளுடைய மோசத்தால் ஒரு பொழுதும் அழியாததும் பொருள் ஒன்றுக்குப் பல மடங்கு விருத்தியாகக் கூடியதும் இவ்வுலகத்திலும் மேலுலகத்திலும் மறுபிறப்பிலும் தக்க சமயத்தில் பயனை உதவக் கூடியதுமாகிய சேமநிதி வைப்பு (ஸேவிங்ஸ் பாங்க்) ஒன்றுண்டு. அது யாதெனில் வறியவரது பசியை ஒழித்தலாகிய ஈகைத்தருமமே. அறிவாளிகள் ஆழ்ந்து யோசிப்பார்களாயின் தமது நிதியில் ஒரு பாகத்தை மிகச் சிறந்ததான, இந்நிதி வைப்பில்வைப்பார்களென்பது திண்ணம்.

"அற்றார் அழி பசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள் வைப்புழி"

என்பது தெய்வ வாக்கன்றோ?

ஈகையைப்பற்றிப் பண்டைத் தமிழ் நூலோர் பலவித பாகுபாடுகள் செய்திருக்கின்றனர். ஒருவனுக்கு மற்றவன் ஏதேனும் உதவி செய்யக்கூடுமாயின் தானே முற்பட்டு வலுவில் செய்தல் தலையாய ஈகை; ஒருவன் கேட்ட பிறகு கொடுப்பது நடுத்தரமான ஈகை; ஈகையை அடையத்தகுந்தவன் கேட்டும் பலதடவை அலைக்கழித்தும் பிறகு கொடுப்பது கடையாய ஈகை; இனி இக்காலத்துப் புலவர் சிலர் ஈகையென்பது இல்லாதவர்க்குக் கொடுத்தல் மாத்திரமன்றி இல்லாருள்ளும் நல்லோர்க்கே ஈதல் என்றும் இல்லார் என்பவர் அறிவிலிகள், சோம்பேறிகள், தமக்கு வேண்டுவன கிடைக்கப்பெறாத நோயாளிகள் என்றும் அவருள் அறிவில்லாதவர்க்கு புத்திமதியும் சோம்பேறிகளுக்கு வேலையும் பிணியாளர்க்கு மருந்தும் உணவும் உடையும் தங்குதற்கு இடமும் கொடுக்க வேண்டுமென்றும் அனைவர்க்கும் ஒரு நிகராகப் பணம் வழங்குதல் தீங்கு பயக்குமென்றும் கூறுவர். இக்கருத்து திருவள்ளுவனார்க்கு முடன்பாடென்பது

"நன்றாற்ற லுள்ளுந் தவறுண்டவரவர்
பண்பறிந் தாற்றாக்கடை" என்று அவர் கூறுமாற்றால் விளங்கும். இவ்வித பாகுபாடுகள் உலகியல் நடத்தல் பொருட்டு அவசியம் வேண்டுமாயினும் தம் வருவாயின் அளவைக் கருதாமலும் கொடுத்த பின் தமக்கு உண்டாகும் புகழ் புண்ணியம் என்பவற்றை நினையாமலும், கொடுப்பதனால் தமக்குநேரும் வறுமை, துன்பம் முதலியவற்றைப் பொருட்படுத்தாமலும், இரப்போனது நிலைமை குணம் ஆகியவற்றை ஆராயாமலும், மறுகணம் தமக்கே பெருங்கேடு வருமென்று தெரியினும் தம்பாலுள்ளதை ஒளியாமல் மன உற்சாகத்துடன் கொடுத்துக் கொடுத்துக் கைதேர்ந்தவர்களுக்கு இவை ஒரு பொருளாகத் தோன்றா. பொருள்களிற் பற்று விட்டாலன்றி பொருளை விடுதல் முடியாது. ஈகைக்குணம் ஒருவனிடத்து மிகுதியுமுண்டாயின் அவன் மனத்தில் பற்று முற்றிலும் அற்றுவிடும். பற்றற்ற கண்ணே ஞானியாய்ப் பிறப்புமே அற்றுவிடுமாகலின் ஈகையே உயிர்க்குறுதி பயப்பதாம். அன்றியும் பொருள் படைத்ததற்குப் பயன் ஈதலே. உலகமுழுதும் ஆளும்

பேரர்சர்க்கும் தனது உணவின் பொருட்டு இரவும் பகலும் ஓய்வின்றி விலங்கை நாடி யலேகின்ற கொலைத்தொழிலுடைய வறிய ஒரு வேடனுக்கும் உணவும் உடையும் ஒரு நிகராக நாழியரிசியும் இரண்டு துணியுமேயாம். உறங்குதல், அஞ்சுதல், இன்பம் துன்பம் முதலிய பலவும் ஒரு நிகராகவேயிருக்கும். ஆகையால் மிகுந்த செல்வம் படைத்தவர் அம்மிகுதிக்குத் தக்கபடி அதிக மனிதருக்குரிய இன்ப துன்பங்களை அனுபவித்தல் இயலாது எனவே சிலரிடத்தில் அதிக செல்வத்தைக் கடவுள் அளித்திருப்பதன் கருத்து இல்லாதவர்க்குக் கொடுப்பதற்காகவே யென்று விளங்கும். செல்வமிருந்தும் ஈயாதவரைத் தாட்சண்ணியமில்லாதவனென்று எல்லாரும் பழிப்பார்கள். செல்வமில்லாதவன் கொடாவிட்டால் அவனை உலகத்தார் அவ்வாறு பழிப்பதில்லை. ஆகையால் லோபி செல்வமுடையவனு யிருப்பதிலும் மற்றொருவன் வறியனு யிருத்தலே சிறந்தது. இக்கருத்துப்பற்றியே.

"வள்ளன்மை யில்லாதான் செல்வத்தின் மற்றையோன்
நல்குரவே போலு நனிநல்ல—கொன்னே
அருளிலன் அன்பிலன் கண்ணறைய னென்று
பலராலிகழப் படான்" என்று நீதிநெறி விளக்க ஆசிரியரும் கூறுவாராயினர்.

பாதக்கண்டத்தில் பல வருடங்களுக்கு முன் தங்கள் பூதவுடம்பழிந்தும் புகழுடம் பழியாது இன்றளவும் விளங்கப்பெற்ற வள்ளல்களும் மன்னர்களும் மேற்கூறியவாறே பாகுபாடுகளின்றி கேட்டோர் கேட்டதைக்கொடுத்து வந்தனர். அன்னூர் சரித்திரங்களிற் சில இங்கெடுத் தெழுதுவோம்.

விஷ்ணு வாமனவதாரஞ் செய்து மூவடிமண் வேண்டியபொழுது சுக்கிரன் திருமாலின் வஞ்சனையைக் கூறித்தடுத்தும் கேட்காது தானஞ்செய்த உத்தம வள்ளளலாகிய மஹாபலி சுக்கிரனை நோக்கி.

"வெள்ளியை யாதல் விளம்பினை மேலோர்
வள்ளியராக வழங்குவ தல்லால்
எள்ளுவ என்சில இன்னுயிரேனுங்
கொள்ளுதல் தீது கொடுப்பதுநன்றால்" எனக்கூறியதும்,

ததீசி முனிவர் தம்மை யாசித்ததேவர்களுக்கு முதுகெலும்பைக் கொடுத்ததும் கர்ணன்தான் பிறந்தபொழுதே உடம்போடு

ண்டானதான் கவச குண்டலங்களைத் தான் கொடுப்பதினால் தன்னுயிர் நீங்குமென்று தெரிந்திருந்தும் பிராமண வடிவங்கொண்ட இந்திரனுக்கு கொடுத்ததும் நமது புராணங்களைப் படித்தோர் யாவருமறிவர். தமிழ் நாட்டில் மிக்க கொடையாளியாகிய குமணன் என்னும் அரசனிடத்து அவன் தம்பியாகிய இளங்குமணன் பகைமை கொண்டு குமணனுடைய நாட்டைக் கைப்பற்றினதுமல்லாமல் காட்டில் ஒளிந்திருக்கும் குமணனைக்கொல்லவும் கருதியிருந்தான். காட்டிலிருந்த குமணனைப் பெருந்தலைச் சாத்தனென்ற புலவர் பரிசுவேண்டுமென்று கேட்க, அப்புலவர்க்குக் கொடுத்தற் கேற்ற பொருள் சிறிதும் தன்னிடம் இல்லாதிருக்கையினும் தன்னிடம் வந்த புலவன் பரிசுபெறாது வாட்டத்தோடு மீளுதல் தனது நாட்டை யிழந்ததனினும் மிக்க துன்பந்தருவதென்றெண்ணி அப்புலவரை நோக்கி நீர் எனது தலையைத் துணித்துச்சென்று அதனைத் துணிக்கக்கருதியுள்ள என் தம்பியிடம் கொடுத்து அவனுக்கு மகிழ்ச்சியை உண்டாக்கி அவன் கொடுக்கும் பரிசைப்பெற்று வாழ்வீராக என்று அவர் கையில் தனது வாளைக் கொடுத்தனன் என்பது பண்டைத்தமிழ் நூலாகிய புறநானூற்றை, ஆராய்வார்க்கு நன்குபுலனும். இவையெல்லாம், சாதலின் இன்னாத தில்லை இனிது மூஉம் ஈதல் இயையாக் கடை என்னும் தெய்வப்புலவர் வாக்கின் பொருளை இனிது புலப்படுத்துகின்றன.

இவர்களைப்போல் வரையறை யில்லாமற் கொடுப்பது யாவர்க்கும் இயைவதன்று. ஆயினும் வருந்தும் உயிர்களிடத்து இரக்கங்கொண்டு இயன்ற மட்டில் உதவிபுரிய வேண்டியது மனிதரிற் பிறந்து அறிவுள்ளராய யாவர்க்கும் கடமையாம்; அன்ன சத்திரம் வித்தியாசாலை தண்ணீர்ப் பந்தல் வைத்தியசாலை முதலிய, எல்லா வுயிர்களும் இன்பத்தை யடையவேண்டிச் செய்யப்படுகிற பொதுத் தருமம் ஒப்புரவு செய்தல் எனப்படும். இவ்விஷயங்களுக்காக ஈதலும் அவசியமே. இவ்வாறு பெருமையும் அருமையும் பெற்று விளங்கிய ஈகை நம் நாட்டுக்கே சிறந்த தர்மமாக விருந்தது. இப்போது காலவேறுபாட்டால் கொடுப்போர் அரிதாயினர். அதிலும் புலவர்கட்குக் கொடுப்போர் இல்லையென்றே துணிந்து சொல்லலாம். இக்காலத்துச் செல்வர்கள் ஆங்கில பாஷையைக்கற்க ஆரம்பித்து அதையாவது முற்றவும் கற்காமலும் ஆங்கிலர்

களிடம் அமைந்துள்ள ஒற்றுமை தேசாபிமானம் ஸ்வதந்திர உணர்ச்சி தன் மறுப்பு முதலிய குணங்களைக் கொள்ளாமலும் சுயபாஷா ஞானம் சிறிதுமின்றி புண்ணியபாவ வுணர்ச்சி குன்றி நாஸ்திக மதக் கோட்பாடுடையவர்களாய் விட்டார்கள். ஆதரிப்பாரின்மையால் தமிழ்ப்பாஷையைக்கற்பவரும் தொகையில் சுருங்கினர். எவனேனும் தமிழ்ப்புலவனென்று வெளிக்கிளம்பினால் மேற்கூறிய செல்வர்கள், அவனைப்பிச்சைக்காரனென்று அவமதிக்கிறார்கள். பண்டைக்காலப் புலவர்கள் கவிபாடிப் பரிசுபெற்று வாழும் வாழ்க்கையை அரசர் வாழ்க்கையினும் மேலாக மதித்திருந்தனர். இவர்கள் சமயம் நேர்ந்தபொழுது அரசர்களுக்குள் நேரும் பகையை அவர்களுக்குத் தக்கவாறு புத்திசொல்லி, சந்துசெய்வித்தும் அரசு நடத்த வேண்டிய முறையைப்பற்றி பலவாறு நீதியைப் புகட்டியும் வந்தனர். இவை சங்க நூலாராய்ச்சியுடையார் அனைவர்க்கும் புலனாம். இக்காலத்துப் பிரபுக்கள் தம்மிடம் யாராவது இரப்போர் வந்தால் நல்லாறெனினும் கொளல்தீது என்ற வள்ளுவர் வாக்கை அறியீரோ என்கிறார்களேயன்றி மேலுலகம் இல் எனினும் ஈதலேநன்று என்ற அக்குறட்பாவின்பிற் பகுதியைத் தாம் அறிந்தவராகவில்லை. இதுகாறுங் கூறியவற்றால் நம் நாட்டுச் செல்வர்கள் பலரும் பண்டைத் தருமமாகிய ஈகையைக் கடைப்பிடித்து அதனோடு பலர்க்கும் பயன்படுவதாகிய ஒப்புரவு செய்தலையும் கடைப்பிடித்து அவ்வாறு செய்வதிலும் சுய பாஷாபிவிருத்தியிற் சிறிதளவு பொருள் செலவு செய்வாராயின் இம்மையிற் புகழும் மறுமையிற் புண்ணியப்பயனும் எய்தி இறுதியில் வீடும் அடைவரென்பது திண்ணம்.

பிள்ளை வளர்த்தல்.

[பிரஹ்மஸ்ரீ எஸ். ராமச்சந்திரய்யரவர்கள் எழுதியது.]

பிள்ளைப் பாக்கியம் பெரும்பாக்கியம், இதைச் சீராகப்போற்றாவிடில், பெருந் துர்ப்பாக்கியமாக முடியும். அந்தோ! இவ்வுலகில் நடக்கும் தீயொழுக்கங்களுக்கும் தீச்செயல்களுக்கும் காரணம் பிள்ளைகளைச் சீராகப் போற்றாததுதான்.

சாஸ்திரங்களில் மகா நுட்பமானதும் மானிட வர்க்கத்துக்கு மிகவும் உபயோகமானதும் இதுதான். "பிள்ளை வளர்த்தல்"

என்றவுடன் சாதாரணமாகக் கொள்ளும் அர்த்தம் என்னவென்றால் பிள்ளைகளின் சரீரத்தை போஷித்தலும் சரீரத்துக்கு வியாதி வாராவண்ணம் ஊண்போட்டு உடையுடுத்தலும் சரீரத்தின் மேனி குன்றா வண்ணமும் மேனி விருத்தியடையும் பொருட்டும் திவ்விய ஸ்நானங்கள் செய்வித்தலுமாகிய விதங்களால் சரீரத்தை மாத்திரமே போஷித்தல் என்பதுதான். நீதி நிபுணர்களும் சாஸ்திரங்களில் மிகப்பயிற்சியுள்ள புத்திமான்களும் இவ்விஷயத்தில் என்ன அபிப்பிராயம் கொண்டிருந்தபோதிலும் அநுபவத்தில் அவ்வபிப்பிராயத்தை யொட்டி இவர்கள் நடக்கிறார்களா? யென்று சந்தேகிக்கும்படியாக விருக்கிறது. அபிப்பிராயம் ஒன்று, நடத்தைவேறு! ஆ! இத்தீச்செயலால் மானிட வர்க்கத்துக்கும் உலகுக்கும் சம்பவித்திருக்கிற கேட்டைச் சிந்திக்கச் சிந்திக்கப்பற்றியெரியாத மனமுடையோர் ஒருவர் இருப்பாராயின், அவர் மானிடரோ? மனம், மொழி, இவற்றின் செயல்களில் ஒற்றுமையின்மைதான் இவ்வுலகிலுள்ள கெடுதிகட் கெல்லாம் காரணம். ஏதாகிலும் கெடுதி சம்பவித்துவிட்டால், தலையில் கை வைத்துக்கொண்டு பேடிகள்போல, "ஓ! ஈசா! இது உன் செயல், விதியை வெல்ல எவரால் முடியும்?" என்றும் கூக்குரலிட்டுக்கதறும் மானிட மூடர்களே? சற்று யோசித்துப் பாருங்கள்; நமக்கு விபத்து வந்துவிட்டால், அது ஈசன்செயல், விதியைவெல்ல முடியாது! சம்பத்து வந்துவிட்டால் நீங்களே கஷ்டப்பட்டு நெற்றி வேர்வை நிலத்தில் விழ உழைத்து சம்பாதித்த ஸ்வயார்ச்சிதம்! இதுவும் நீதிதான்! நீதி, நீதியென்று வழங்கும் மானிட சிருஷ்டியான அநீதங்களுக்குள் இது ஒன்று. பாடுபட்டுத் தேடிப்பணத்தைப் புதைத்து வைத்து மதிகெட்ட மானிடரே! சற்று யோசியுங்கள். சகல சாஸ்திரங்களையும் கற்று சபையோர் பிரமித்து மெய்மறந்து "பலே பேஷ், நன்றாயிருக்கிறது!" யென்று சந்தோஷக்கூச்சல்களையும் ஆமோதங்களையும் செய்யும்படியாக வெகு அட்டகாசமாகப் பிரசங்கம் செய்யும் பிரசங்கிகளே! சற்று யோசியுங்கள்! பணம் வேண்டியதுதான்; பிரசங்கங்கள் செய்யவேண்டியது தான்; தீர்க்கமான ஆலோசனைகள் செய்யவேண்டியது தான்; இவையெல்லாம் உபகரணங்களே தவிர, முக்கிய லட்சியமாகுமோ? யோசனைகட்கேற்ற செய்கைகள் நடவாத வரையில் யோசனைகளும் பணமும் பலனற்றவையல்லவோ? ஒருவன் உலகில் செய்யும்கேடு, நலங்களுக்குப்பாத்தியப்பட்டவர்கள் கிரமமே

தாய்களும் தந்தையரும் குருக்களும் பந்துக்களும் சிநேகிதர்களும் பொது ஜனங்களுமே யென்று ஒருவாறு சொல்லலாம். குழந்தைப் பருவத்திலும் வாலிப பருவத்திலும் தீயொழுக்கங்களைத் தெரிந்தும் தெரியாமலும் கற்பித்துவிட்டு வயது காலத்தில், பொய், புரட்டு, திருட்டு, கொலை முதலிய தீச்செயல்களைச் செய்கிறார்களென்று மனவருத்தப் படுவதிலும் பொய்யர்களையும் திருடர்களையும் கொலையாளிகளையும் நிந்தித்துக் குற்றங்கூறி ஆர்ப்பாட்டமாகப் பேசுவதிலும் யாது பிரயோசனம்? பொய், புரட்டு, திருட்டு முதலிய தீச்செயல்கள் பூண்டற்றுப் போவதற்குச்செய்ய வேண்டிய சாச்வத தர்மத்தை நிலைநாட்டினாலல்லவோ இவையொழியும்? நெல்லை விதைத்துவிட்டுக் கோதுமை விளையவில்லையே யென்று மனம் நோவதில் யாது பிரயோஜனம்?

அவிவேகமான அந்தகாரக்கடலில் ஆழ்ந்திருக்கிறார்கள் அன்னையர்கள். இவர்களிடம் உற்பவிக்கும் குழந்தைகளும் இவர்களால் வளர்க்கப்படும் குழந்தைகளும் தர்ம பரிபாலன சிகாமணிகளாகாமல் போவது ஆச்சரியமோ? "தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்" என்று பழமொழி புண்டல்லவா? ஒருவன் ஒரு தீச்செயல்களைச் செய்யுங்கால், இதனுண்மையை நாம் நமது அநுபவத்தில் பிரத்தியட்சத்தில் அறிகிறோம். ஆகையால் சரீர போஷணை எவ்வளவு அவசியமோ அவ்வளவு இன்னும் அதிகமாக—அவசியம் மனோபுஷ்டியும். குழந்தைப் பருவத்தில் குழந்தைகள் பேசத்திறமையற்றவைகளாயிருந்த போதிலும் அவற்றின் முன்பிலும் பக்கங்களிலும் நடக்கும் செயல்களால் அவற்றின் மனமானது பாதிக்கப்பட மாட்டாது என்று நினைப்பது பிசகு. அதிக உஷ்ணமான காற்று வீசினாலும், அதி சீதளமான காற்று வீசினாலும் ஆகாரங்கள் அபரிமிதமாகவாவது மிகப்போதாமலாவது கொடுக்கப்பட்டாலும் குழந்தைகளின் சரீரம் பாதிக்கப்படுகிறது. இதுபோலவே குழந்தைகளுக்குப் பக்கங்களில் எண்ணும் எண்ணங்களும் பேசும் பேச்சுக்களும் நடக்கும் நடத்தைகளும் கண், செவி, மூக்கு முதலிய காரணங்களின் மூலமாகக் குழந்தைகளின் மனத்தைப்பாதித்து, பின்னர் நன்மைக்காவது தீமைக்காவது காரணமாகின்றனவென்பதில் சிறிதும் ஐயமில்லை; இவ்விஷயத்தைப்பற்றி எவ்வளவு வேண்டுமென்றாலும் எழுதலாம். பலபல கூறிப் பக்கங்களை நிரப்புவதில் பயனென்னை?

ஒரு நீதியைக்கற்றால் அந்நீதி தவறாமல் நடக்கும் மனோதிடமும் வைராக்கியமும் உண்டாகவேண்டும். "அறஞ்செய விரும்பு" என்பது ஔவையாருடைய அப்தவாக்கு. தமிழ் நாட்டில் பள்ளிக்கூடம் செல்லும் பாலர்களில் இதைக்கல்லாதவர் இல்லை, ஆனால் இந்நீதியின்படி அநுஷ்டிப்பவர்களின் கணக்கை யெடுப்போமானல் நூற்றுக்கு ஒன்றாவது ஆயிரத்துக்கு ஒன்றாவது தேறுவது அசாத்தியமாயிருக்கும். அந்தோ! இது எவ்வளவு கோரமானது! பரிதாபகரமானது' பயங்கரமானது! உலகு முழுதும் இப்படியேதானா? தர்மிஷ்டர்கள் இல்லாமலா ஆய்விட்டது இவ்வுலகு? இல்லை, இல்லை. அந்த ஸ்திதிக்கு வந்துவிட்டால் பிரளய காலம் வந்துவிட்டதென்றே சொல்லவேண்டும்; இப்புவியே பிராது. புண்ணிய புருஷர்களால் தான் உலகு ஜீவிக்கிறது "உலகில் அக்கிரமங்கள் விருத்திபடைந்து தர்மம் குறைந்துவிட்டால் நான் அவதரிக்கிறேன் தர்மத்தை நிலைநிறுத்துவதற்காக" யென்பது ஸ்ரீகிருஷ்ண பகவான் வாக்கு. இது பொய்யாகாது. பேதைமையாலும் மாயையாலும் தர்மம் அழிந்துபோகாத வண்ணம், தர்மம் சீர்குலைந்து போகும் காலங்களிலெல்லாம் தர்ம பரிபாலனத்தின் பொருட்டு அவதாரமாகும் புண்ணிய புருஷர்களையுடைய இப்பாரத நாட்டில் இப்பொழுது தர்மம் சீர்குலைந்துபோய் விட்டது. உண்மையான பிரஹ்மசாரிகளும் உண்மையான கிருகஸ்தர்களும் உண்மையான சந்நியாசிகளும் அகப்படுவது இப்பொழுது பஞ்சமாய்ப் போய்விட்டது. சாச்வதமான தர்மம் நிலைநாட்டப்பட வேண்டும் இப்புண்ணிய பூமியில் 'ஸ்வதர்ம' பரிபாலன சிந்தையும் பக்தியும் வைராக்கியமும் வேரூன்றி ஓங்கிவளரும் நாளில் தான் ராமராவண பாரத யுத்தங்களையும் வெட்கச் செய்யும்படியாக இப்பொழுது ஐரோப்பாக்கண்டத்தில் நடைபெறுகின்ற மகா யுத்தங்கள் இனிமேல் நடைபெறாமலிருப்பதற்கு முக்கியமான நாகரீகமும் யோசனைகளும் செயல்களும் ஏற்படும்.

இவற்றிற்கெல்லாம் ஆதாரம் சீராக "பிள்ளை வளர்த்தல்" தான். குழந்தை தாயின் வயிற்றில் கர்ப்பமாகி, பூஸ்பரிசம் ஆகி, தகுந்த வயது வருங்காலம் வரையில் வெகு சீராயும் ஜாக்கிரதையாயும் வளர்க்கப்பட வேண்டும். கர்ப்பமாயிருக்கும்பொழுது தாயார் கெட்ட எண்ணங்களை எண்ணக்கூடாது. சாத்விகமா

னவையும் வீர்யம், புத்தி, சௌர்யம் முதலியவற்றை உண்டாக்குவனவுமான வுணவுகளைப் புசிக்கவேண்டும். கெட்ட சகவாசம் உதவாது; தெய்வ கீதங்களையும் நற்புஸ்தகங்களையும் பாடிப் படிக்க வேண்டும். மாதா படிக்கத் தெரியாதவளாயிருந்தால் "பிறக்கும் குழந்தை மகா தர்மிஷ்டனையும் நீதிமானையும் வீர்யம், சௌகர்யம், ஜீவகாருண்ணியம் முதலிய மேலான குணங்களையுடையவனையு மிருக்கவேண்டு"மென்று தன்னுடைய வீட்டுவேலைகளொழிந்த மற்ற சமயங்களில் சிந்திக்கவேண்டும். வம்பு பேசுதல் கூடவே கூடாது. இதனாலுண்டாகும் தீங்கை யளவிட முடியாது. பயமின்னதென்றே குழந்தைகளுக்குத் தெரியும் படியாக எவரும் நடக்கக்கூடாது. குழந்தைப்பருவம் கடந்து வாலிப பருவம் வருமளவும் பெற்றோர்களும் குழந்தைகளோடு பழகும் மற்றவர்களும் மேற்கூறிய நீதிகளை யனுசரிக்கவேண்டும். குழந்தைப் பருவமானது தான்யம் விளையும் நிலங்களுக்கு எருப் போடுகிற காலம் போன்றது. வாலிப பர்வத்தில் தான் குருகுலவாசம் செய்து கல்விகற்க வேண்டியது. இப்பருவம் நிலத்தை உழுது விதைவிதைக்கும் காலம் போன்றது. இப்பொழுதுதான் பிரஹ்மசர்யாச்ரம காலம்.

ஸ்வதர்மம் சாஸ்திரோக்தமாக அநுஷ்டிக்கப்பட்டால் இவ்விந்திய புண்ணிய பூமியில் உண்மையான பிரஹ்மசாரிகளும் உண்மையான கிருகஸ்தர்களும் உண்மையான சந்நியாசிகளும் உற்பவிப்பார்கள். அப்பொழுது தான் உலகம் சீர்பெறும்.

ஓம் தத்ஸத்.

தமிழின் சிறப்பு.

[பிரஹ்மஸ்ரீ ல. சு. சுப்பராய அய்யரவர்கள் எழுதியது.]

(முன் தொடர்ச்சி)

அப்படிக்கொள்வதாயின், தமிழுக்கே சிறப்பான ற, ழ, (எ, ஒ, ன) கூட பிறசொற்களில் இல்லாமையால், அவைகளும் அப்படியே குறைவானவையே யாகும். அங்ஙனம் நிறைந்துள்ள சொல்லெதுவுமில்லை. தமிழுக்கு ற, ழ, என்னும் எழுத்துக்களே ஓர் பேரழகு. "யாழினிது குழலினிதென்ப தம் தம்மக்கண் மழ

லைச்சொல் கேளாதவர்", என்பதுபோல் அவை நிறைந்துவரு மிடங்களில் நோக்கின் தெரியும். தவிர முந்திரி அரைக்காணி முதலான ஒன்றுக்குக் குறைந்த எல்லா எண்களும், ஒன்றுமுதல் ஆயிரம் வரையுள்ள எல்லா முழு எண்களும், அவ்வவைகளுக்கு ஏற்பட்டுள்ள குறிகளும்; விரற்கடை, சாண், முழம், காதம் முதலான நீட்டலளவைகளும்; ஆழாக்கு, உழக்கு, குறுணி முதலான முகத்தலளவைகளும்; நாழிகை, பகல், இரவு, நாள், திங்கள், ஆண்டு முதலான பொழுதளவைகளும், குழி, காணி, முதலிய நில அளவைகளும்; குன்றி மணி, வராகனிடை, மணங்கு, முதலான எடுத்தலளவைகளும், குறிக்கப்படும் சொற்களும், மெய், வாய், கண், மூக்கு, கை, கால் முதலான உறுப்புகளும்; மரம், கல், மண், நீர், நிலம் முதலானவைகளும்; ஆடு, மாடு, கோழி முதலிய விலங்குகளும், பறவைகளும், ஊர்வன, நீர்வாழ்வன, செடி கொடிகளாகிய இறைவனருளாற்பெற்ற எல்லாவகைத்தான இனங்களில் ஒவ்வொன்றுக்குமுள்ள பெயர்களும்; அவ்வவை களின் உறுப்புகள், தொழில்கள், பண்புகள், உணர்ச்சிகள் முதலிய எல்லாவற்றையும் உணர்த்தும் சொற்களும்; பெயர், வினை, இடை, உரி, யாகிய நால்வகைச் சொற்களும்; அவைகளின் முதனிலை, இடைநிலை, ஈறுநிலையாகிய பற்பலமொழியாக்கத்தின் பிரிவுகளும், தொகுதிகளும், சொற்றொடர்களும், அவைகளுக்கு வேண்டிய சொற்புணர்ச்சிகளும், தமிழுக்கு உரிமையான மொழிகளே. அன்றியும் எழுத்துக்களின் ஒலியளவு ஆய்ந்து ஏற்படுத்தப்பட்டுள்ள உயிரளபு, ஒற்றளபு, குற்றியலுகரம் முதலியவை தமிழுக்கே சிறந்தன. தமிழ்ச்சொல் கடல்போல் அளவு கடந்தது. "கற்றது கைம்மண்ணளவு, கல்லாதுலகளவு" என்பதற்கிணங்க, என்ன சொல்லினும் உண்மையை நோக்குமிடத்து, சொன்னவை முற்றும் இன்மையே எனக்கொள்ளற்பாலதான அவ்வளவு குறைந்ததாகும்.

10. "அறஞ்செய விரும்பு" முதலான ஔவையார் பாடல்கள், திருக்குறள், திரிகடுகம், நான்மணிக்கடிகை, சிறுபஞ்சமூலம், முதலான பல நூல்களிலும் தமிழ்நீங்கிய பிறமொழிகள் அருமை. இந்நூல்களிலும் பிறவற்றிலும் வடமொழி முதலான ஏனைச்சொற்கள் காணப்படுவது தமிழின் சொற்குறைவாலன்று. ஆக்கியோர் அவைகளை இயற்றுங்கால் அத்தன்மை

யாய்க் கருதியிருப்பின் பிறசொற்களைக் கலவாமல் அறவே ஒழித்திருத்தல் கூடும். ஆனால், பயனையே நோக்கமாகக் கருதி, சொல்லைப் பொருட்டாக நினைத்துப் பிறசொற்களில் பொருமைப் படல் குற்றங்காணல் என்னும் கறைகள் தம்மிடத்து அணுகப் பெறாத தூய்மை வாய்ந்தமையின், அவர்கள் ஓரோவிடத்துப் பிற சொற்களைத் தமிழுக்கிடையில் புகுத்தியுள்ளார் என்பது, அவ்வாக்கியோர்கள் பல்வேறிடங்களில் தமிழ்ச்சொற்களிலேயே ஒரு பொருளனவேயன்றி பல்பொருட் கிளவிகளையும், ஓரே பொருளுள்ள பல சொற்களையும் வழங்கியிருப்பதால் தெள்ளிதில் விளங்கும். தமிழின் தனிமையை யறியாதோர் அதனை வட சொல்லிலிருந்து பெறப்பட்டதென்றும் இன்னும் பல்வேறு பான்மையாகவும் தெரிவிக்கின்றனர். தொன்றுதொட்டே தமிழ் வடமொழியோடு பழகி வந்ததால், தொல்லைப்பழக்கமே வழக்க மாகி வடமொழிச் சொற்கள் பெரும்பான்மையாய் விரவப்பெற்று அவையும் தமிழேபோல் வழக்கத்துக் கியல் பாகிவிட்டன. வட மொழியும் இவ்வாறு தமிழ் மொழிகளால் விரவப்பெறாதது அது பேசப்படாமையாலேயாம். கலப்புத் தமிழைப்பற்றி சென்ற முறை நான் குறித்துள்ள "தமிழின் தற்கால நிலை" என்பதி லும் மற்றும் சில விடங்களிலும் காட்டியுள்ளேன்.

11. தமிழ் தனிச்சொல்லா யிருப்பதன்றி, கன்னடம் தெலுங்கு மலையாளம் முதலிய பிறசொற்களுக்கும் தாயாயிருக்கின்றது. இவைகளனைத்தும் முன் சென்னை தலைமைக் கல்லூரியின் கண்ணிருந்த வடமொழிப்புலவர் பெருமான் ஸ்ரீமாந். சேஷகிரி சாஸ்திரியார் தாம் செய்த ஓர் நூலில் விளக்கிக் காட்டியுள்ளார். இப்பொழுது வழங்கும் அச்சொற்களினின்றும் இது தெளி வாய் காட்டப்படக்கூடும். நான், நீ முதலான மூவிடம் ஐம்பால் பெயர்களும், சிற்சில முதனிலைகளும், கண் முதலான உறுப்புகளும், பால், வண்டி இவைபோன்ற பல பெயர்களும், வினைகளும், ஒன்று முதலான எண்களின் பேர்களும் மற்றும் பல சொற்களும், தமிழிலிருந்தே கொள்ளப்பட்டுத் திரிந்தும் திரியாமலும் வருவதை அம்மொழிகளில் காணலாம். இப்படி பிறசொற்களுக்குத் தாயாயிருக்கும் தமிழைப் பிற சொற்களி னின்றும் பெறப்பட்டதெனும் திரிபு என்னே! பிற சொற்களின்

கலப்பே இதற்கிடம் தந்தது. பிறர் பழிப்பதாலேயே உண்மையான பெருமை குறையுமோ?

12. இத்தகைய தமிழ் மொழிக்கு வடமொழி நிகரென்பதும் பொருந்தாது. தமிழிலுள்ள பல்வகைமாண்புகளை அது தழுவப்பெற்றும், மணமில்லாமலரை யொப்ப, அது ஒருவராலும் பேசப்படாமையால் "இறந்தமொழி" என்று எல்லோராலும் சொல்லப்படுகிறது. வடமொழி நூல்களில் மட்டுமுள்ளது. அஃதன்றி தமிழ் பேசப்படுதலாலும் வளர்க்கப்படுதலாலும் "வளர்மொழி" எனப்படுகிறது. வடமொழி ஒற்றெழுத்துக்களாலும், சிக்குள்ள சொற்களாலும் நிறைந்திருப்பதால் அதை எழுதவும், படிக்கவும், பயிலவும் மிக அரிதாயிருக்கிறது தமிழின் அமைப்பு அவ்வாறின்றி எல்லா நயமுமுடையது. குறைந்த எழுத்து, வளர்ந்த ஒலி, நிறைந்தசொல், பரந்த பொருள், கண்ணுக்கு அழகு, காதுக்கு இனிமை என்பன தெளிவாம். இவைகளை, முத்துக்களினிடையே பவளம் நிரையொக்க வைக்கப்பெற்ற கோவை போன்ற எழுத்துக்களாலும், க, ச, த, ப, என்னும் எழுத்துக்களின் பற்பல ஒலிகளாலும் அறிதல்கூடும்; அன்றியும், அவைகளினுடையவும், ற, ர-ந, ன, முதலிய எழுத்துக்களினுடையவும் தனித்தனியான வேலைகளையும், ஒலிவேறுபாடுகளையும் ஐயந்திரிபறக் கற்கவும் முறைப்படி வழங்கவும் வேண்டிய வரையறுப்புகள் உள. ஒவ்வொரு எழுத்தின் பிறப்பு, ஒலி, வழங்கும்போது வருமிடம் முதலிய தெளிவான வரம்புகள் தமிழின்கண்ணே ஏற்பட்டுள. வடமொழியிலுள்ள முதற்பொருளாகிய மறைகளை முதனூலாகக்கொண்டே தமிழிலுள்ள அத்தகைய எந்நூலும் உண்டாயின எனக்கொள்ளவேண்டுமென்பது, இறைவனே நேரில் தமிழ்மக்களோடு வாழ்ந்து தமிழ்நூல்கள் செய்தலின் மறைகளின் நூற்பயனை நேராகவே கொண்டிருக்கலாமாதலால், கட்டாயமில்லை. ஆனால் வடநூலை முதனூலாகக் கொண்ட பலதமிழ் வழிநூலுள வென்பது மறுக்கப்படாதது. தமிழிலுள்ள நூற்சிறப்பைக்காட்டவே இது சொல்லப்பட்டது. திருவள்ளுவர் திருக்குறள் தமிழ்மறை எனப்படுவதே முதனூல் வழிநூலைப்பற்றிய அவ்வையத்தை நீக்கும்.

13. தொன்மையில் பாண்டியக்கோமான்களால் ஓம்பப்பட்டு (மேற்சொன்ன) முதல், இடை, கடைச்சங்க மாகிய தமிழ்க்

கூட்டத்தாரைக்கொண்டு, தமிழ் தலைமைபெற்றது. தலைக்கூட்டம் இற்றைக்குச்சுமார் பன்னிரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய தெனக் கொள்ளப்படுகிறது. இது முக்கணனர், பொதியமலைக் கடவுள், முருகக்கடவுள் முதலான 549 பேர்களுள்ளிட்ட 4449 புலவர்களால், இப்போது கடல்கொள்ளப்பட்ட கன்யா குமரிக்குத் தெற்கே முன்னிருந்த மதுரையில், 4440 ஆண்டு கள் நடத்தப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இடைக் கூட்டம், பொதியமலைப் பெருமான், தொல்காப்பியர், முதலான 59 பேரை யுள்ளிட்ட 3700 புலவர்களால் நடத்தப்பட்டு, 3700 ஆண்டுகள் கபாடபுரத்தில் இருந்தது. அகத்தியம், தொல் காப்பியம் ஈங்கியற்றப்பட்டனவேபோலும். கடைக்கூட்டம், நக்கீரர், பரணர், சொக்கலிங்கக் கடவுள், முதலிய 49 பேரை யுள்ளிட்ட 449 புலவர்களால் பாடப்பட்டு, 1850 ஆண்டுகள், இப்போ துள்ள மதுரையி லிருந்தது. திருக்குறள்முதலிய நூல்களுள் ளிட்ட "பதினெண் கீழ்க்கணக்கு" களும் மற்றும் பல அருமை யான நூல்களும் ஈங்கு தொகுக்கப்பட்டன. இக்கூட்டங்களுக்கு இறைவனு லருளப்பட்ட சங்கப்பலகை, பாட்சியுள்ள நூல் களுக்கும் புலவர்க்கு மன்றி பிறவற்றிற்கு இடம் கொடாத தன்மையுடையது. அதில் திருவள்ளுவர்க்கும் அவரி குறளுக் கும் முதலிடம் கிடைத்தது. தொன்மைக் கூட்டத்தைக் குறிக்க, இப்போதும் ஓர் சிறு கூட்டம் மதுரையில் நடைபெறு கிறது. மேற்காணும் முக்கூட்டப்புலவர்களுடையவும், நூல்க ளுடையவும் கணக்கு, தன்மை, சிறப்புமுதலியவற்றை இன்னும் விரிக்கவும்வேண்டுமோ? பின்னும், கம்பன், புகழேந்தி, ஒட்டக் கூத்தன், காளமேகம் முதலான புலவர்கள், தண்டாச்சிறப் பினளாகிய நாமகளின் திருவருளால் நிகழ்த்திய அருஞ் செயல் களும், நூல்களும், அவைகளின் சிறப்புக்களும் எண்ணித் தொ லையா. தொன்மையில் சங்கப் பலகையாலும், பின்னளில் புலமை பெற்றபுரவலராலும் புலவராலும் அருமையான எந்நூலும் அரங் கேற்றப் பெற்றே வழங்கவந்தன.

14. மேற் கூறப்பட்ட சிறப்புக்களில் பல பிற சொற்களில் இருந்தாலும், தமிழிலன்றி மற்றவைகளில் இவ்வாறு எல்லாம் ஒருங் கிசைந்திருத்த லரிது. இப்படி மொழிவது தற்புகழ்ச்சி யிலாது முற்று முண்மை என்பது நடுநிலைமையாய் எல்லாச்

சொற்களையும் சீர்தூக்கிப் பார்ப்பார் எவராலும் கொள்ளப்படுமென்பது என் புல்லறிவின் துணிபு. இத்தகைய சீருஞ் சிறப்பும் வாய்ந்த தமிழ் நமக்கு இறைவனால் அருளப்பட்டிருப்பது கிட்டா மருந்து கிட்டியவாறன்றோ? அத்தகைய அருமை அறிந்து அதற்கு அறிகுறியாக தொன்மையான தமிழ் நூல்களை அவாவோடு ஆய்ந்து அந்நூற் பயனைக்கொண்டு தமிழ்மக்கள் நல்வழிப்பட இறைவன் அருள் புரிவாராக

நமது பல சரக்குக்கடை.

["விச்வாமித்ரர்" எழுதுகிறார்.]

சென்ற மாதம் நான் எழுதின வியாசத்தில் அநேக வடமொழிச் சொற்களை உபயோகித்து விட்டேன். ஒரு செட்டியார் எனக்கு ஆருயிர் நண்பர். அவர் எவ்வித மாறுதலையும் பழிப்பார்; பழைய எண்ணங்களையும், முன்னோர்களின் கருத்துக்களையும் தமதுசொந்த அபிப்பிராயங்களாக உடையவர்; தற்கால நவீன முயற்சிகளை அவர், அறியாமல், கிணற்றுத் தவளையைப் போல் தம் வாழ்நாளைக் கழித்து வருகிறார். ஆனால் சில சமயங்களில் அவர் நல்ல விஷயங்களை போதிப்பார். சென்ற மாதச்சரக்குகளை அவர் படித்துவிட்டு "ஹூம்! இந்த வியாஸம் தமிழாகவும் இல்லை; வடமொழியாகவும் இல்லை. தமிழ் எழுதும்போது சம்ஸ்கிருதச் சொற்களை ஏனையா கலக்கிறீர்?" என்றார். ஆம். இது உண்மையே. ஒரு பாஷையில் ஒரு வியாஸம் எழுதும்போது இதர பாஷைப் பதங்களை உபயோகித்தல் விரும்பத் தகாத விஷயமாகும்; நமது உள்ளக்கருத்துக்களைப் பிறருக்கறிவிக்கும் பொருட்டே பாஷை என்னும் ஒரு வஸ்து கண்டு பிடிக்கப்பட்டது. ஆகவே நமது எண்ணங்களை வெளியிட கடினமான பதங்களை உபயோகித்தல் வீண் வேலையாகும். சுலபமான நடையே பெருந்தன்மையான வியாஸத்துக்கு லக்ஷணம் என்பது இங்கிலீஷில் ஒரு சன்மொழி. சிலர் இங்கிலீஷில் வியாஸம் எழுதும்போது லத்தீன்; ப்ரெஞ்சு சொற்களைக் கலக்கிறார்கள். இதனை ஆங்கில தேசதது நிபுணர்கள் விரும்புவதில்லை. தமிழ் எழுதும்போது, பலர், பிறமொழிப் பதங்களை அபரிமிதமாக உபயோகித்து விடு

கிறார்கள். என் முன் கட்டுரையில் கணக்கற்ற வடமொழிச்சொற்களை உபயோகம் செய்ததைக் குறித்து விசனிக்கின்றேன். இனிமேது கூடியவரை சுத்தத் தமிழை எழுத முயற்சிக்கின்றேன். தமிழ் அபிமானிகளும் அங்ஙனமே செய்ய வேண்டுகின்றேன். தமிழிலும் கூட கடினநடையை மேற்கொள்ள வேண்டாம். அதிக படிப்பின்,—தேர்ந்த அறிவின்,—முதிர்ந்த அநுபவத்தின்,—லக்ஷணம் எளிய நடையேயாம்.

* * *

"உலகம் பலவிதம்" என்பது ஓர் அழகிய உண்மையான பழமொழி. இந்த உலகத்தில் ஒருவனைப்போல் மற்றொருவனிருப்பதில்லை. ஒரு தகப்பனுக்குப் பிறந்த இரண்டு பிள்ளைகள் ஒரே மாதிரியாக விருப்பதில்லை. இயற்கையிலும் இதே விஷயம் தான். ஒரு இலையைப்போல் மற்றொரு இலை யிருப்பதில்லை. அப்படியிருக்கும்பொழுது பல விதத்திலும் மாறுபட்ட மனிதர்கள் எங்ஙனம் ஒரே மனிதராக இருத்தல்கூடும்? ஒரு விஷயத்தைப்பற்றி எல்லாரும் நம்மைப்போலவே அபிப்பிராயம் கொள்ள வேண்டியதென்று நாம் கோறுவது பெரிய பிழையாகும். அத்தியந்த நண்பர்களுக்குள்ளும் அபிப்பிராய பேதம் உண்டாவது ஸஹஜமேயாம். ஆனால் அதற்காக அவர்களை நாம் வெறுத்துப் பகைத்தல் மனிதத்தன்மையன்று, அவனவனுடைய அறிவு, அநுபவத்திற்கேற்ப அபிப்பிராயமும் இருக்குமாதலால் எல்லாரும் ஒரே காலத்தில் ஒரு விஷயத்தைப்பற்றி ஒரேவித அபிப்பிராயத்தைக் கொள்ளுவார்கள் என்று நாம் எண்ணுவது அறிவின்மையாகும். நாகரீகத்தில் முதிர்ந்த தேசத்தாருள்ளும் அற்ப விஷயங்களில் கூட பெரிய பேதங்கள் உண்டாய் விடுகின்றன. ஆனால் அதுபற்றி அவர்கள் ஒருவரை ஒருவர் பகைத்துத் துவேஷம் பாராட்டுவதில்லை.

* * *

கலாசாலைகளில் வாசிக்கும் மாணவர்களுக்கு இப்பொழுது வரவர நமது பழைய ஆசாரங்களைத் தூஷித்து ஏளனம் செய்யும் வழக்கம் பழக்கமாகிவிட்டது; நம்தேசத்து ஆசாரங்களின் உயர்வையும் பலனையும் அவர்கள் கவனிக்கின்றார்களில்லை; இங்கிலீஷ் பேச ஆரம்பிக்கும்போதே தாம் உண்மையில் ஐரோப்பியரென்று நினைத்துவிடுகிறார்கள். நிற்க, நமது மாணவர்களுக்குத் தினந்

தோறும் தேகப்பயிற்சிவேண்டியது அவசியமே. ஆனல் சுலபமானதும், செலவில்லாததும், பிரயோஜனகரமானதுமான சிறிய தொழில்களை அவர்கள் அறவேகைவிட்டனர். பள்ளிக் கூடம் விட்டதும் 10, 20 ரூபாய் மதிப்புள்ள "டென்னிஸ்" பந்து ஆடும் கட்டைகளை எடுத்துக்கொண்டு புறப்பட்டுவிடுகின்றனர். வீட்டிற்குவந்தால் இவர்கள் மரம்போல் நிற்க, சேவகர்கள் இவர்களுடைய உடம்பிலிருந்து சட்டைகளைக்கழற்றுகின்றனர். இவர்கள் உடுக்கும் வஸ்திரங்களைச் சேவகர்கள் துவைத்து உலர்த்த வேண்டும்! என்னே இவர்களுடைய சோம்பேறித்தனம்! தமது வஸ்திரங்களை இவர்களே துவைத்தால் அது தேகப்பயிற்சியாகாதா? வீட்டிற்குவேண்டிய தண்ணீரை, இந்தமாணவர்கள், கிணற்றிலிருந்து தூக்கிக் கொட்டினல் அது தேகப்பயிற்சியாகாதா? வீட்டுவேலைகளை ஒழிந்தநேரங்களிற் செய்தால் பலவிதத்திலும் அநுகூலமில்லையா? பணமும் மீறும்; தேசத்துக்கும் பலம் உண்டாகும்; விண்காலக்ஷேபமும் உண்டாகாது. இங்கிலீஷ்வழக்கங்களையே தம்மதாசாரங்களாகவும், இங்கிலீஷ்காரன் வார்த்தையையே வேதவாக்காகவும் கொண்டுள்ள இக்கால மாணவர்கள் மேற்கூறிய நன்மொழியைச் சிறிதுகவனிப்பார்களா? என்றாலும் ஏழைச்சொல் அம்பலம் ஏறுதாமே?

* * *

மதம்வேறு- மதத்தைத்தழுவும் ஜனங்கள்வேறு. ஒருமதத்தினர் அயோக்கியராயும் மோசக்காரராயுமிருந்தால் அதுமதத்தின் தவறன்று. இதனை நன்குணராத எனது நண்பர், செட்டியார், இக்காலபிராமணர்களைத்திட்ட ஆரம்பித்தார். ஸந்தியாவந்தனம் கூடச்செய்யாது எப்பொழுதும் பொய், மோசம், சூது முதலிய அநீதமான காரியங்களை அவர்கள் செய்துவருகின்றனர்; குலாசாரங்களைத் தவிர்த்துப் பஞ்சமஸ்திரீகளுடன் கலப்பதும், கள், மாமிசம் முதலியவைகளை உட்கொள்ளுவதும், கொள்ளை, கொலை முதலியவைகளைச்செய்து சிறைவாசம் செய்வதும் சில பிராஹமணர்களுக்கு ஸஹஜமாயிருக்கிறது. இப்படிப்பட்ட கிராதகர்களுக்கு "அந்தணர்" என்ற பெயர் தகுமா? என்று இப்படியெல்லாம் பிராஹ்மணனுகிய என் முன்னிலையிலேயே, செட்டியார், கபடமின்றி சொல்லிவிட்டார். நான் என்னசெய்வது? இவர் சொல்வது உண்மைதான், ஆனல் இது ஹிந்துமதத்தின் தவருகுமா? இதனுலேயே உண்மையான, யோக்கியமான, பிராம்மணர்களில்

லாம்லாபோய்விட்டனர்? நீசத்தனம்மிகுந்த, ராக்ஷஸகுணம் பொருந்திய சில பிராஹ்மணர்கள் வர்ணாச்ரமதர்மத்தை அறவே ஒழித்துவிட்டால், எல்லாப்பிராஹ்மணர்களும் அதேகுணமுடையவர்கள் என்று தீர்மானிப்பது சுத்தப் பிசகு. ஆனால் அயோக்யர்கள் நீடித்து நல்வாழ்வு வாழமுடியாதென்பது திண்ணம். கிறிஸ்து மதம் அருமையான சிறந்த நீதிகளை உபதேசிக்கின்றது. ஆனால் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் ஐரோப்பியர்களின் தற்காலகார்யங்களும் எண்ணங்களும் உலகப் பிரஸித்தமல்லவா?

* * *

எனக்கு இம்மாதம் என்னவோ வெறுப்புக்குணமே அதிகமாய் விட்டது. கலிகாலத்தின் கோரம் நாளுக்குநாள் முற்றி வருகிறது. எனக்கு வரும் சில பத்திரிகைகளில் அபிப்ராயமான பல விஷயங்கள் எழுதப்படுகின்றன. ஜாதி பேதத்தை அறவே ஒழித்து, பிராஹ்மணன், துலுக்கன், கிறிஸ்தவன், பஞ்சமன் ஆகிய எல்லோரும் ஸமபோஜனம் செய்து, மணச்சடங்குகள் செய்ய வேண்டியதுதான் தேசம் முன்னுக்கு வருவதற்கு முதல் காரணம் என்று ஒரு பத்திரிகை கூறுகிறது. இதனைக்கண்ட எனது நண்பர், செட்டியார், "வீண் பேச்சைவிட்டு முக்கிய விஷயம் எதையாவது குறித்துப்பேசும்" என்று கூறிவிட்டு, உடனே, மறுபடியும், "விச்வாமித்ரரே! இம்மாதம் எங்கெங்கோ ஜில்லா ஜில்லாவாக திரிந்தீரே! இப்பொழுது என்னவோ ஊரெல்லாம் பஞ்சமாமே! அது என்ன விஷயம்?" என்றார். நமது தேசத்தில் இப்பொழுது பஞ்சம் ஸ்திரமாக நிலைத்துவிட்டது. அது பலவிதமாயும் பல காரணங்களை யுடைத்தாயும் இருக்கிறது. இந்தியாவில் பலருக்குப் பஞ்சம் ஸஹஜமாய் விட்டது. நாம் வாசிப்பதெல்லாம் ராஜாங்க உத்யோகத்துக்கே என்று கருதுகிறோம். கிராமங்களில் அன்ன வஸ்திரத்துக்கு வழியின்றி, அரை வயிற்று அன்னத்துடன் காலங்கழிக்கும் பலரை நான் அறிவேன். இந்தப் பஞ்சத்தின் காரணமென்ன என்று கவனித்தால் நான் வாசித்த புஸ்தகங்கள் பல காரணங்களைக் கூறுகின்றன. W. W. ஹண்டர் தமது நூலில் இந்தியாவின் பஞ்சத்துக்குக் காரணம் மழையின்மை என்கிறார்; நமது பாட்டனார் நவரோஜியோ, நமது பணமெல்லாம் பிறநாட்டு வர்த்தகர்களுக்குப் போய்விடுவதால் நம்மவர் கையில் தம்பிடிகூட இல்லாமல் ஏழையாகி அன்னமுமின்

றித் திண்டாடுகின்றனர் என்று சொல்லுகிறார். பஞ்சத்தின் காரணத்தைக் குறித்து நமது ரமேச சந்திரரைக் கேட்டால் அவர், வங்காளத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள சாசுவத நிலவரித்திட்டம் (Permanent Revenue Settlement) இந்தியாவிலுள்ள மற்ற மாகாணங்களிலும் செய்யப்படாமை ஜனங்களுக்குப் பலவிதத்திலும் கஷ்டமாக இருக்கிறது, முப்பது வருஷத்திற்கொருமுறை ராஜாங்கத்தார் நில வரியை உயர்த்தி விடுகிறார்கள், ஆனால் நிலத்தின் விளைவு என்னவோ ஒரு திட்டமாகவே இருக்கிறது, ஆகவே, குடிகள் நிலமாசூல் முழுவதையும் நிலவரியாக ராஜாங்கத்துக்குக் கொடுத்துவிட்டுப் பட்டினியாக விருக்கிறார்கள்—என்று இப்படியெல்லாம் ரமேசர் சொல்லுகிறார். இப்பொழுது புதிதாக எழும்பியுள்ள தான் றேன்றிப் புலவர்கள், நம்மவர்கள் கல்யாணம் முதலிய சடங்குகளில் கணக்கில்லாமல் பணத்தைச் செலவிட்டுப் பின்னர் சோற்றுக்குத் திண்டாடுகின்றனர், என்று கூறுகிறார்கள். வேறு சிலர், ஹிந்துக்களில் பால விவாஹம் இருப்பதால் தம்பதிகள், பிழைக்கும் வழி தெரியாமல் அநேக பிள்ளைகளைப் பெற்றுவிட்டு அவஸ்தைப்படுகின்றனர்; மால்தஸ் என்ற நூலில், பிழைக்கும்வழி 1, 2, 3, 4, 6......ஆக விருத்தியாக ஜனத்தொகை 1, 2, 4, 16, 256......இப்படியாக விருத்தியாகின்றது; ஆதலால் பஞ்சம் உண்டாகாம விருப்பதற்கு ஜனத்தொகையைக் குறைக்க வேண்டுமென்று கூறுகிறார், என்கின்றனர். இவைகளை யெல்லாம் எனது நண்பர் செட்டியாரிடம் சொல்லிக் கடைசியாக "உம்மைப்போன்ற செட்டிமார்கள் ஏழைகளிடம் பணத்தை நூற்றுக்கு மாதம் ஒன்றுக்கு $2\frac{1}{2}$ அல்லது 3 வீதம் வட்டிக்குக்கொடுத்து அவர்கள் தலையில் குல்லாப் போடுவதும் பஞ்சத்துக்கு ஒரு காரணம்" என்றேன். அவர் அதற்குக் கோபத்துடன் சிரித்தார். ஆம். மேற்கூறிய காரணங்கள் யாவும் உண்மையே. நம்மவர்கள் இந்தியாவில் குடிகொண்டிருக்கும் பஞ்சத்தை நீக்குவதை விட்டுவிட்டு, ஜாதிபேதம் போய்விட வேண்டும், ஸமபோஜனம் செய்ய வேண்டும் என்று வீண் வார்த்தைகள் பேசி வருவது உண்மையான தேசபக்தியின் செய்கையன்று.

* * * *

என் நண்பர் ஒருவர் ஸ்ரீ கோபாலகிருஷ்ண கோகலேயைப் பற்றி ஓர் கதைசொன்னார். பூனாவிலிருந்து கோகுலர் இங்கிலாந்து

க்குப்போக விருக்கையில் நூற்றுக்கணக்கான ஜனங்களும் இவருடைய குமாரத்திகளும் இவரை வழிவிட பம்பாய்க்கு வந்தார்கள். கப்பலில் ஏறும்போது இவருடைய புத்ரிகள் "தந்தையே! சௌக்கியமாகப் போய்வருகிறீரா?" என்றனர். அப்பொழுது அவரைச் சுற்றியிருந்த இந்து பிரமுகர்கள் "கோகுலரே! உமது புத்ரிகளுக்கு மாத்திரம் நீர் தந்தையன்று. நீர் எங்களுக்கும் உண்மையான தகப்பன். ஆகவே; எங்கள் பிதாவே! சௌக்கியமாய்ப் போய்வாரும்" என்று சொல்ல, அதற்குக் கோகுலரின் புத்ரிகள், "அப்படியானால் நீங்கள் யாவரும் எனக்குச் சகோதரர்கள் ஆகிறீர்கள். அந்தப் பாக்கியம் எனக்குக் கிடைத்ததைப்பற்றி மிகவும் சந்தோஷிக்கின்றோம்" என்று பதில் அளித்து ஆநந்தித்தனர். இதுவன்றோ மேன்மக்கள் குணம்!

* * *

வேலூர் சிறைச்சாலைக்கு ஒருநாள் நான் போயிருந்தேன். என் நிலங்களைப் பயிரிட்டுவந்த ஓர் குடியானவன் அங்குக் கைதியாக விருந்தான். அவனை நோக்கி நான் "என்னடா! கந்தா; என்னகுற்றம் செய்து நீ சிறைவாசம் செய்கிறாய்?" என்றேன். அதற்கு அவன் "சாமீ! எனக்கு இருமல் வந்தது. தெரியாமல் தும்மினேன். அதுதான் நான் செய்த குற்றம். அதற்காக இப்போது நான் கைதியாக விருக்கிறேன்" என்றான். எனக்கு இது நன்றாக விளங்காததால் "என்னடா! தும்மியது ஒரு குற்றமா" என்று கேட்டேன். அதற்கு அவன், "நம்மூர் மணியகாரர் சுப்பிரமணிய ஐயர் வீட்டில் ஒருநாள் ராத்ரியில், திருட்டுத்தனமாக நுழைந்து அவர் குடிகளிடமிருந்து வசூல் செய்திருந்த கிஸ்திப்பணத்தைக் களவாடிக் கொண்டிருக்கும்பொழுது, தும்மல் வந்து விட்டது. பீரங்கி சுட்டதுபோல் தும்மினேன். உடனே மணியகாரர் விழித்துக்கொண்டார்; என்னையும் கண்டுவிட்டார். தும்மியதன் காரணமாக நான் இப்பொழுது ஸர்க்கார் சத்திரத்தில் வஸித்து வருகிறேன்" என்றான்.

* * *

நான் ஒருவிதமான பைத்தியக்காரன். பல பத்திரிகைகளுக்கு என்னுடைய எண்ணங்களைப் பலவித மாறுதல்களுடன் எழுதுவது வழக்கம். சிலருக்குத் தம்முடைய பெயர் பத்திரிகை

யில் பிரசுரிக்கப்பட வேண்டுமென்பது விருப்பம். அதனால் சில பத்ரிகைகளில் நான் எழுதும் வியாஸத்தை அப்படியே திருடித் தம் சொந்தப் பெயரைக் கையொப்பமிட்டு வேறு பத்ரிகைகளுக்கு அனுப்பிவிடுகிறார்கள். இது பெருந்தன்மையாமா? நான் ஒரு மாதப்பத்ரிகையில் "யோக்யதை" என்ற வியாஸம் எழுதினேன். ஒரு மாதமானபின் அதே வியாஸம் "நல்லொழுக்கம்" என்ற தலைப்பெயருடன் மிகச் சில மாறுதலுடன் ஒரு முதலியார் ஒரு வாரப்பத்ரிகையில் பிரசுரம் செய்துவிட்டார். இதுதான் அவர் போதிக்கவந்த நல்லொழுக்கம் போலும்! இப்படியும் விஷயங்களைத் திருடும் யமகாதகர்கள் இருக்கிறார்கள் என்பதை நான் அறியாமற் போய்விட்டேன்.

* * *

"சோதாக்களுக்கும், திருட்டுப் பசங்களுக்கும், அயோக்கியர்களுக்கும் கடைசியாகக் காப்பாற்றிக்கொள்ளும் இடம் தேச பக்திதான்" என்று மஹா மேதாவியாகிய ஜான்ஸன் என்ற இங்கிலீஷ் மஹான் சொல்லுகிறார். இது முற்றிலும் உண்மையன்றாயினும் சில விஷயங்களில் ஸத்யவாக்காக விருக்கிறது. தேசாபிமானி என்று பெயர்வைத்துக் கொண்டு நீசத்தொழில்களையும், சுயநலச் செய்கைகளையும் புரியும் தேசத்துரோஹிகள் எல்லா நாட்டிலும் இருக்கின்றனர். கேவலம் பட்டங்களுக்காகப் பாடுபடும் தேசபக்தர்கள் நம் தேசத்தில் இல்லாமலா போய்விட்டார்கள்!

* * *

ஷைலக்கைப் போல் கடும் வட்டிவாங்கி ஏழைகளைத் துன்புறுத்தும் எனது நண்பர் செட்டியாரை நோக்கி, "ஓய், செட்டியாரே! கணக்கு வழக்கில்லாமல் வட்டிவாங்குகிறீரே! ஒன்றேமுக்கால் ரூபாய் கொடுத்து நமது "பாநு" வுக்குச் சந்தாதாரராகப் போமே! மேலும் இது நல்ல பத்திரிகை." என்றேன். அவர், அதற்கு "என்ன? ஐயா! போயும் போயும் தமிழ்ப்பத்ரிகையை வாங்க சிபார்சுசெய்கிறீர். நல்ல இங்கிலீஷ் பத்ரிகைகள் உமக்கு வருகின்றனவே. அதில் ஏதாவதொன்றை வாங்கச் சொல்லலாகாதா? தமிழை எவன் இக்காலத்தில் மதிக்கிறான்? அப்படியே நீர் சொல்லும் அந்தப்பத்ரிகை நல்லதாயிருந்தால் உம்மிடமிருந்து வாங்கி வாசித்தால் போகிறது, அது என்ன மாதமொருமுறை தானே வருகிறது? நீர் வாசித்தவுடனே நான் படிக்கிறேன். நான்

என் வீணாகப் பணத்தைக் கொடுக்கவேண்டும்?" என்றார். இப்படிப்பட்ட வெட்கமற்ற, பத்திரிகை வாசிப்பவர்களும் நமது தமிழ் நாட்டில் இருக்கின்றனரே!

* * *

இப்பூலோக வாழ்வு மலைமேலேறி செய்யும் சண்டையை யொத்தது. அதில் எளிதில் ஜயிப்போமென்றெண்ணுவது மூடத்தனம். விக்கினங் (தடை) களால் விளையும்பயன் மிகவும் இனிமையானது. கஷ்டங்கள் நமது திறமையை நமக்கு வெளிப்படுத்தி நம் ஊக்கத்தை அதிகப்படுத்துகின்றன. கஷ்டங்களை அநுபவிக்க வேண்டியதைப்பற்றி ஒருவன் ஏன சஞ்சலப்பட வேண்டும்? ஒரு பெண்ணின்காதை இரத்தம் வரும்படிக் குத்திவிட்டுக் கொஞ்சகாலங் கழித்து விலையேறப்பெற்ற நகைகளைக் காதில் அணிவிப்பதைப் போல் தான் கஷ்டங்களை அநுபவித்தலும்.

* * * *

ஆங்கில நாடகக் கவிச் சக்கரவர்த்தியாகிய ஷேக்ஸ்பியரைப் பற்றி யறியாதார் ஒருவருமிரார். அவர் வாழ்ந்த காலம் எலிஸபத் ராணியார் அரசாண்ட காலமாகும். ஷேக்ஸ்பியரே தாம் எழுதிய நாடகங்களை நடிக்கும் பொழுது, ராஜவேடந்தரிப்பது வழக்கம். அக்கால நாடகக் கொட்டகைகளில் ராஜவம்சத்தாருக்கும் சிறந்த பெருமாட்டிகளுக்கும் நாடக மேடையின் மீதே இடம் உண்டு. ஒரு நாளிரவு எலிஸபெத் ராணியே அங்கு விஜயம் செய்திருந்தனர். அன்றையதின நாடகத்தில் ஷேக்ஸ்பியர் ராஜவேஷம் பூண்டிருந்தார். வெளித்தோற்றத்திற்கேற்ப உண்மையில் ராஜகம்பீர குணம் ஷேக்ஸ்பியருக்கு இருக்கிறதா என்பதை சோதித்து அறியும்படி, எலிஸபெத் ராணியார் தம் கையிலிருந்த கைக்குட்டையைக் கீழே நழுவவிட்டார். ஷேக்ஸ்பியர் கீழே குனிந்து அந்தக் கைக்குட்டையை ராணிக்குக் கொடாவிடில் குடிகள் அரசிக்குக் காட்டவேண்டிய ராஜவிச்வாஸ குணம் அற்ற துரோஹியாகக் கருதப்படுவார். அங்ஙனம் தமக்குச் சமீபத்தில் விழுந்த கைக்குட்டையை எடுத்துக் கொடுத்து விட்டாலோ தாம்பூண்டிருந்த ராஜாவின் உண்மையான கம்பீரத்வம் இல்லாமற் போய் விடும். என்ன செய்வார் ஷேக்ஸ்பியர்? அவர், உடனே, நாடக விஷயத்தில் சேவகன் ஒருவன் தன்னை யணுகியிருப்பதைக்கண்டு அவனைப் பார்த்து "அடா, ஸேவகா! நான் உனக்கு இட்ட கட்ட

ளையைச் செய்து முடிப்பதற்குமுன் கீழே விழுந்திருக்கும் கைக் குட்டையை எடுத்துக்கொடு' என்று ஆஞ்ஞாபித்தார். சேவகன் தம் கையில் கொடுத்த குட்டையை ராஜ கம்பீரத்துடன் எலிஸபத்தினிடம் கொடுத்துத் தம் அந்தஸ்தைக் காப்பாற்றிக்கொண்டார். அவரது அகன்ற கல்வித் திறத்தையும் நிகரற்றபுத்தி கோசரத்தையும் கண்ட மஹாராணியும் சீமாட்டிகளும் ஷேக்ஸ்பியரை மிகவும் கொண்டாடினர்.

* * * *

"எவனுக்குப் பெரும்பாபங்களையும் குற்றங்களையும் செய்ய மனோதிடமும் தேஹபலமும் இருக்கின்றனவோ, அவனுக்கு வெகு சீக்கிரத்தில் சிறந்த புண்யாத்மாவாய்விட சக்தியும் தைரியமும் இருக்கின்றன" என்று ஒரு இங்கிலீஷ் புலவர் கூறுகிறார். எனக்கு இது உண்மையென்றே தோன்றுகிறது. கெட்ட காரியங்களைச் செய்வது எளிது என்று பலர் நம்புகிறார்கள். ஆனால் அது தவறு. நல்லது செய்ய எவ்வளவு கஷ்டமும் பலமும் வேண்டியிருக்கிறதோ அவ்வளவு தைரியமும் பலமும் வேண்டியிருக்கிறது கெட்டது செய்வதற்கும். இதுவேதான் மனோதத்துவ சாஸ்திரிகளின் அபிப்பிராயமும். பழக்கத்தின் கீழ் வந்துவிட்டால் பாவம் செய்வதும் ஸுலபம், புண்யம் செய்வதும் எளிது. "காப்பாற்றப்பட்ட ஓர் பாபிதான் சிறந்த புண்யாத்மா" என்பது ஓர் இங்கிலீஷ் பழமொழி.

சமாச்சாரக் குறிப்புகள்.

சென்ற வருஷத்திய இந்திய ஜன மகாசபை (காங்கிரஸ்) வெகு விமரிசையாக பம்பாய் மாநகரில் கூடிற்று; வழக்கம்போல அழகிய பிரசங்கங்கள் செய்யப்பட்டன. அக்கிராசனாதிபதி ஸ்ரீமான் சத்தியேந்திர ஸிம்ஹ அவர்கள் செய்த பிரசங்கம் அவ்வளவு திருப்திகரமானதாயில்லை; இந்தியர்கள் ஸ்வராஜ்ய மடைவதற்கு இப்பொழுது தகுந்தவர்களல்லர் என்று உளறிக்கொட்டி விட்டார். இவர் சட்ட விஷயங்களில் அதிமேதாவியென்றும் பணம் சம்பாதிப்பதில் மிகுந்த சாமர்த்தியமும் ஆசையுமுள்ளவர் என்றும் நாம் அறிவோம்; ஆனால் இவர் "இங்கிலீஷ்மான்", "ஸிவில் மிலிட்டெரி கெஜட்" போன்ற ஆங்கிலோ இந்தியப் பத்

திரீகை ஸ்தலங்களில் சிறிது காலமாவது ராஜரீக விஷயங்களில் பயிற்சி பெற்றுள்ளாரோ? என்னவோ? நாம் அறியோம். ஸிம்ஹ என்ற இவருடைய பெயருக்கேற்ற பெருங்கர்ச்சனையைக் காண வில்லை. ஆங்கிலோ இந்திய அபிப்பிராயமாகிய தொத்து வியாதி பலமாகப் பிடித்துக்கொள்ளவே, இந்த ஸிம்ஹமானது சிறு ஆட்டுக்குட்டியாக மாறி அழத்தொடங்கி விட்டது. ஐயோ! பாவம்!

* * * *

எல்லா இந்திய முஸ்லீம் சபையும் கூடிற்று. இதன் அக்கிராசனாதிபதியாகிய ஸ்ரீமான் மஸ்ருல்ஹக் என்பவர் கம்பீரமானதொரு பிரசங்கம் செய்தார். சபையோர்களில் சிலர் கலகம் செய்ய ஆரம்பிக்கவே, சில அதிருப்தியான சம்பவங்கள் நடந்தன. ஆயினும் அக்கிராசனாதிபதியின் பெருந்தன்மையினால் கலகமானது வாய்வார்த்தைகளுடன் அடங்கி விட்டது. இச்சமயத்தில் ஸ்ரீமான் மஸ்ருல்ஹக் அவர்கள் காட்டிய மனோவன்மையும் அமைதியும் மிகவும் மெச்சத்தக்கன. 1907-ம் வருஷத்தில் சூரத் மாநகரில் கூடிய இந்திய ஜன மகாசபையை ஹிருதயம் கலங்க அடித்து அதற்கு க்ஷயரோகத்தை உண்டாக்கிவிட்ட இருகட்சி ஹிந்துக்களும் இப்பொழுது இதைக்கண்டு வெட்கித் தலைகுனிய வேண்டாமா?

* * * *

வருஷாவருஷம் வழக்கம்போல, கைத்தொழில் மகாசபை, ஆசாரச் சீர்திருத்த மகாசபை முதலிய சபைகள் கூடியதில் குறைவேயில்லை. நமது நாட்டுக் கைத்தொழில்களெல்லாம் வாய்த்தொழிலாக மாற்றப்பட்டு, வெகு நன்றாக நடந்தன. நல்ல வேளையாய் ஆசாரச் சீர்திருத்த மகாசபையில் கைம்பெண்களின் கல்யாண விஷயம் பெரிதாகப்பாராட்டப்படவில்லை; ஸ்திரீ வித்தியாப்யாசமே முக்கிய விஷயமாயிருந்தது. ஸ்திரீகளுக்கு அறிவு விருத்தியாகவேண்டுவது அவசியமென்பதில் சந்தேகமில்லை; ஆனால் புருஷர்களைப்போலத் தாங்களும் நடக்க விரும்புவதும் அதற்கேற்ற தற்காலக் கல்வியில் பயிற்சி பெறுவதும் சிருஷ்டி நீதிக்கு விரோதங்களாம். புருஷர்களுடன் சமமாக இருப்பதற்கு அரசாங்கத்தாரால் முடியுமான அநுமதி பெற்றுக்கொள்ளலாம்; ஆனால் புருஷர்களைப்போல மீசை வளர்ப்பதற்கும் கர்ப்பந்தரியாமலிருப்பதற்குமுள்ள பாக்கியத்தை இவர்கள் எவ்வாறு அடைவார்கள்? இவ்விஷயங்களிலும் புருஷர்களைப்போலவே ஸ்தி

சிகள் இருப்பதற்குக் கிருபை பாலிக்க வேண்டுமென்று சென்னையின் பக்கத்திலுள்ள ஏதாவது ஒரு கிராமத்திலுள்ள ஸ்திரீகள் ஜெகதீஸ்வானுக்கு மனுச்செய்துகொள்வார்களோ?

* * * *

யுத்தம் சீக்கிரத்தில் முடிவு பெறும் என்பதற்குரிய அடையாளங்கள் ஒன்றையும் இதுவரை காணவில்லை. நாளுக்கு நாள் யுத்தத்தின் உக்கிரம் பெருகி வருகிறது. இருந்திருந்து யுத்தம் ஆசியாப் பக்கத்திலும் நகர்ந்துகொண்டு வருகிறதுபோல இருக்கிறது. பாரசீக தேசத்தில் ருஷியர்களுக்கும் துருக்கியர்களுக்கும் சண்டை நடந்துகொண்டு வருகிறது. நமக்கு ஐரோப்பாவிலிருந்து கப்பல்கள் வரும் வழியாகிய சுவேஸ்வாய்க்காலை எதிர்த்து எகிப்து தேசத்தை மறுபடியும் ஜெர்மனியர்களும் துருக்கியர்களும் படையெடுக்கப் போகின்றார்களென்ற வதந்தி வந்துகொண்டிருக்கிறது. நமது தேசத்துக்கு வரும் கப்பல்களையும் தபால்கொண்டு வரும் கப்பல்களைக்கூட எதிரிகள் உடைத்து சமுத்திரத்திற்குள் அமிழ்த்தி விடுகிறார்கள். சமீபத்தில் "பாரசீகம்" என்ற தபால் கப்பல் அமிழ்த்தப்பட்டதில் சுமார் இருநூறு யாத்திரிகர்கள் கொல்லப்பட்டு விட்டனர்; 30000 தபால் பைகள் வரை சமுத்திரத்திற்குள் போய்விட்டன. "அடாது செய்பவன் படாது படுவான்" என்னும் பழமொழி பொய்யாகுமா?

* * * *

ஈப்போவிலிருந்து சொ. முருகப்ப செட்டியார் என்னும் நமது நண்பர் பத்திரிகைகளின் பக்கங்களைக் குறிப்பிடுவதற்கு ஆங்கில எண்களுக்குப் பதிலாகத் தமிழ் எண்களைப் போடவேண்டுமென்றும், தமிழ்ப் பாஷையின் அபிவிருத்திக்குப் பாடுபடுவதாகப் பாவனை செய்யும் பத்திராதிபர்கள் ஏன் இந்த விஷயத்தைக் கவனிக்கிறதில்லையென்றும் வெகு ஆத்திரத்துடன் நமக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். இந்நாள்வரை நாம் தமிழ் எண்களைக் கவனியாமலிருந்ததற்காக மிகவும் விசனிக்கிறோம். இப்பொழுதாவது நாம் ஏன் அந்த எண்களைப் போடவில்லையென்றால், நடுவில் அந்த எண்களை யாரம்பித்தல் நன்றாயிராது என்று போடவில்லை. அடுத்த வருஷாரம்பத்திலிருந்து தமிழ் எண்களைக் கட்டாயமாகப் போடுவோம்.